விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சாவஜித்து வரு ஐப்பசி 28உ வெள்ளிக்கிழமை — Colombo, November, 14 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 30 | இதழ் 164

அகதிகள்பற்றி மகாத்மா சபதம்

ஜாம் நகரில் சர்தார் படேல்

பண்டித நேரு காஷ்மீரிலிருந்து டில்லி திரும்பினர்

நவம்பர் 30-ம் தேதி கூட்டு ராணுவம் கலைக்கப்படும்

புதுடில்லி, நவ. 12

இன்று மகாத்மா காந்தி அகில இந்திய ரேடியோ மூலம் குரு க்ஷேத்திர முகாமிலுள்ள அகதிகளுக்குப் பின் வருமாறு பேசினார்:-

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் எந்தெந்த இடங்களிலெல்லாமிருந்து துரத்தப்பட்டார்களோ அந்தந்த இடங்களுக்கு மீண்டும் கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் அகதிகள் திரும்பிச் சென்று குடியேறுவதற்கு வேண்டிய முயற்சிகள் யாவற்றையும் என்னாலியன்றவரை செய்வேன். இதற்காக நான் என் உயிர் நள்ளவரை உழைப்பேன். இறந்தவர்களை மீட்க முடியாது. ஆனால் உயிரோடிருக்கும் மற்ற அகதிகள் அனைவரும் தத்தம் இடங்களுக்குச் சென்று சௌக்கியமாக வாழ நான் பாடுபடுவேன். இதை நாம் செய்து முடியாவிடில் இது இந்தியா மீதும் பாகிஸ்தான் மீதும் சுமத்தப்படும் என்றுமழியாத பழியாகும். இந்தப் பழி நீங்காவிடில் அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நாசத்தை விளைவிக்கும்.

பண்டித நேரு விஜயம்

ஸ்ரீநகர், நவ. 12

இன்று பண்டித நேரு பாரமுலா நகருக்கு விஜயம் செய்த அதேசமயத்தில் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கும் இந்திய துருப்புகள் பாரமுலாவிலிருந்து 27 மைல் தூரத்தில் ஹாஜி பீர் நதி ஜீலம் நதியுடன் சந்திக்குமிடத்திலிருக்கும் ஊரி நகரையும் கைப்பற்றினர். பாகிஸ்தான் எல்லையிலுள்ள கோஹலா நகரை நோக்கிச் செல்லும் ரஸ்தாவில் முன்னேறிச் செல்லும் இந்திய துருப்புகள் பாரமுலாவிலிருந்து 23 மைல் தூரத்திலுள்ள மஹோரா நகரின் மின்சார நிலையத்தையும் மீட்டனர். இம்மின்சார நிலையத்திலிருந்துதான் காஷ்மீரத்தின் பெரும் பகுதிக்கு மின்சார சக்தி விநியோகமாகிறது.

இன்று பண்டித நேரு படையெடுத்து வந்த எதிரிகளால் துப்பம் செய்யப்பட்ட கன்னிகா மாடத்தை பார்வையிட்டார். இங்குதான் எதிரிகள் 4 கன்னிகா ஸ்திரீகளையும் இரு பிரிட்டிஷ் தம்பதிகளையும் சுட்டுக் கொன்றனர். பாரமுலாவிலுள்ள பெண்கள் தங்களை எதிரிகள் எவ்வாறு சித்திரவதை செய்தார்கள் என்பதை பண்டித நேருவிடம் தெரிவித்து அழுது புலம்பினர். அப்பொழுது நேரு, "கண்ணீர் வடிப்பதற்கு இது தருணமல்ல. காஷ்மீர் மீது எதிரிகள் படையெடுத்து வந்தது ஒரு விதத்தில் நமக்கு நல்லதாயிற்று. நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடுடனுமிருப்பதற்கு இது ஓர் படிப்பினையாயிற்று. மிக்க தீர மனதுடன் எதிர்காலத்தை நீங்கள் எதிர் நோக்க வேண்டும்

பண்டித நேரு பாரமுல்லாக்கப்பட்ட பாரமுலா நகர் வீதிகள் வழியாக நடந்து திரிந்து சுற்றிப் பார்த்தார் தீயால் நாசமாக்கப்பட்ட அந்நகரிலுள்ள ஒரு சதுக்கத்தில் கூடிய திரளான கூட்டத்தில் பண்டித நேரு பேசியபோது "பாக்கிஸ்தான் என்றால் என்ன என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிந்துபோய் விட்டது" என்று தெரிவித்தார். அக் கூட்டத்தை நோக்கி ஷேக் அப்துல்லா பின்வருமாறு தெரிவித்தார்:- காஷ்மீரத்தின் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும ஏற்பட்ட ஆபத்து நீங்கியபின் இந்திய துருப்புகள் ஒரு வினாடிகூட காஷ்மீரத்தின் மண்ணில் தங்கியிருக்கமாட்டார்கள் என்று நான் உங்களுக்கு நிச்சயமாகக் கூறுகிறேன். இஸ்லாம் பெயரைச் சொல்லிக்கொண்டு பாக்கிஸ்தானிலிருந்து காஷ்மீரத்தின்மீது படையெடுத்து வந்தவர்கள் செய்த அக்கிரமத்தைப்போல வேறெவரும் அக்கிரமம் செய்ததில்லை.

பண்டித நேரு இன்றிரவு புதுடில்லிக்குத் திரும்பச் சென்றார்.

பிரதமர் திரும்பினார்

புதுடில்லி, நவ. 13

இந்தியா பிரதம மந்திரி பண்டித நேரு ஸ்ரீநகர் சென்று நேற்றிரவு புதுடில்லிக்குத் திரும்பினார்.

ஜாம் நகரில் சர்தார்படேல்

ஜாம் நகர், நவ. 12

இந்தியா உதவிப் பிரதம மந்திரி சர்தார் படேல் தனி விமானத்தில் இன்று ஜாம் நகர் வந்து சேர்ந்தார். அவரை ஜனங்கள் வெகு விமரிசையாக வரவேற்றார்கள்.

பாக்கிஸ்தான் செய்திகள்

கராச்சி, நவ. 12

இந்தோனேஷிய குடியரசு சர்க்கார் பிரதிநிதி இன்று கராச்சி வந்து இந்தோனேஷிய நிலைமையை அறிய ஒரு தூதுகோஷ்டியை அனுப்பிவைக்குமாறு பாக்கிஸ்தான் சர்க்காரைக் கேட்டுக்கொண்டார்.

சிட்டகாங் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுமாறு கிழக்கு வங்காள சர்க்கார் அமெரிக்க எஞ்ஜினியர்களைக் கேட்டுக்கொள்வார்களென்று தெரிகிறது. இப்பொழுது இத்துறைமுகத்தில் 15000 டன் எடையுள்ள கப்பல்கள் வந்து தங்க முடியும்.

கூட்டு ராணுவம் கலைக்கப்படும்

லண்டன், நவ. 12

நவம்பர் 30-ம் தேதியன்று இந்தியாவிலுள்ள கூட்டு ராணுவம் கலைக்கப்படுமென்ற செய்தியை லண்டனிலுள்ள முக்கிய பத்திரிகைகள் பெரிய தலைப்புகளுடன் முதல் பக்கத்தில் பிரசுரம் செய்திருக்கின்றன. "நவம்பர் 30-ம் தேதி ஆச்சின்லெக் இந்தியாவை விட்டு வெளியேறுகிறார்" என்று 7 பத்தி தலைப்பிட்டு 'ஈவ்னிங் நியூஸ்' பத்திரிகைசெய்தி வெளியிட்டிருக்கிறது. "ஆச்சின்லெக் இந்தியாவைக் கைவிடுகிறார்' என்று 3 பத்தி தலைப்பிட்டு 'ஸ்டார்' பத்திரிகை செய்தியை பிரசுரித்திருக்கிறது.

இருதரப்பாருக்குமிடையே ஒத்துழைப்பிலலாத்திருப்பதால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் கூட்டு ராணுவ பிரதம தளபதியாக உள்ள ஃபீல்டு மார்ஷல் ஆச்சின்லெக் தனது ராணுவத்தை நவம்பர் 30-ம் தேதி பண்று கலைத்து விடுவார்என்று பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

புதுடில்லி அறிக்கை

புதுடில்லி, நவ. 12

நவம்பர் 30-ம் தேதி கூட்டு ராணுவ பிரதம தளபதி தலைமை காரியாலயம் எடுபட்டு விடும். அதன் பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மத்யஸ்தமான கூட்டு ராணுவமோ கூட்டு ராணுவ சபையோ இருக்காது. இந்த ராணுவத்தைச் சேர்ந்தவர்கள்அனைவரும் பிரிட்டிஷார். அவர்கள் மத்யஸ்தராக இநந்துவேலைசெய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டதால் இக்கூட்டு ராணுவம் கலைக்கப்படுகிறது; ஆகாயப் படையையும் கப்பற்படையையும்சேர்ந்தபிரிட்டிஷ் ராணுவம் கலைக்கப்படுகிறது.

டிசம்பர் 31-ம் தேதிவரை அதாவது அவர்களது உத்தியோகம் முடியும்வரை இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தங்கியிருக்கும் பிரிட்டிஷ் ராணுவத்தினரின் விஷயங்களை மேற்பார்வை செய்யுமட்டும் ஒரு பிரிட்டிஷ் தளபதியை பிரிட்டிஷ் சர்க்கார் நியமிப்பார்கள். இவர் நவம்பர் 30-ம்தேதிமுதல் டிசம்பர் 31-ம் தேதிவரை மட்டும் வேலை செய்வார். இரு டொமினியன்களின் ராணுவத்தை திருத்தியமைப்பது பற்றிய வேலை இனி பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுக்கு இல்லை. அந்த ராணுவங்களிலுள்ள பிரிட்டிஷாரின் நலத்தை மட்டும் இந்த பிரிட்டிஷ் தளபதி கவனித்துக் கொள்வார். (அ-பிரஸ்)

பாராளுமன்ற அச்சகம்

பிரிட்டனில் இருந்து இயந்திரங்கள்

கொழும்பு, நவ. 13

பாராளுமன்ற அச்சகத்துக்கு தேவையான இயந்திர வகைகள் தளவாடங்களை அரசாங்க அச்சக அதிகாரி திரு. ஏ. ஸி. ரிச்சார்ட் பெற்றுள்ளார். இந்த தளவாடங்கள் சுமார் 10 லட்சம் ரூபாய் வருமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனுக்குச் சென்றிருந்த திரு ரிச்சார்ட் விமானமூலம் நேற்று இலங்கைவந்து சேர்ந்துள்ளார். முக்கியமான இயந்திர வகைகள் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்படும். மிகுதியானவைகளை அமெரிக்காவிலிருந்து வாங்கப்படும். இப்பொழுதுள்ள அரசாங்க அச்சகத்துடனும் இத்துடன் சில இயந்திர வகைகள் வருமென்று கூறப்படுகிறது.

எகிப்து சூடான் ஐக்கியம்

பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேற வேண்டும்

எகிப்து மன்னர் பிரசங்கம்

கெய்ரோ, நவ. 12

இன்று எகிப்திய பார்லிமெண்டில் எகிப்தியமன்னர் பாரூக் பேசியபொழுது பின்வருமாறு தெரிவித்தார்:-

நைல் நதிப் பள்ளத்தாக்கின் ஐக்கியமே நமது லட்சியம். நைல் நதியின் இருபுறங்களிலுமுள்ள சூடானிலிருந்தும் எகிப்திலிருந்தும் பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேற வேண்டுமென்பதே நமது கோரிக்கை. இவைகளை நிறைவேற்ற எகிப்து சர்க்கார் தனது முழுபலத்தையும் உபயோகித்து முயற்சி செய்யும். இந்தக் கோரிக்கைகளுக்கு பிரிட்டன் இணங்காவிடில் சூடானும் எகிப்தும் தங்களுக்குள் ஐக்கிய தேச சபைக் கொள்கையினபடி ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ளும். அப்படி பிரிட்டன் இணங்காவிடில் அவைகளை நிறைவேற்ற எகிப்து தனது முழு பலத்தையும் உபயோகிக்கும்.

1946-வது வருடத்திய ஆங்கிலோ-எகிப்திய ஒப்பந்தம் அனுமதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியதாக இருக்கிறதென்பதை ஐக்கிய தேச பாதுகாப்பு சபையில் எகிப்திய பிரதிநிதிகள் வெற்றிகரமாக ருசுப்படுத்திவிட்டார்கள்.

அராபியர் சுதந்தரத்திற்கும் பாலஸ்தீன ஐக்கியத்திற்கும் பொருந்தாத எவ்விதமான தீர்ப்பையும் அராபிய நாடுகள் அங்கீகரிக்கமாட்டா. இதற்கு முரணான தீர்ப்பு ஏற்படின் மகத்திய கிழக்கு நாடுகளின் அமைதிக்குப் பெரிய பங்கம் ஏற்படும்.

சுதந்தரமான லிபியாவுடனே எகிப்து நேசபான்மையுடனிருக்க விரும்புகிறது.

ஸ்டெர்லிங் பிரதேசத்திலிருந்து எகிப்து வெளியேறிவிட்டதால் எகிப்தின் நாணயத்தை உறுதிப்படுத்தவும் பொருளாதார சுதந்திரத்தை நிலைநாட்டவும் எகிப்தின் தேஷனலைப் பாங்கை தேசீயமயமாக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

எகிப்தின் ராணுவத்தைப் பலப்படுத்த சர்க்கார் சகல விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வார்கள்.

லண்டன் அபிப்பிராயம்

லண்டன், நவ 12

எகிப்து மன்னர் எகிப்திய பார்லிமெண்டில் செய்த பிரசங்கத்தைக் குறித்து சிந்திக்கும், இங்குள்ளோர் கூடிய சீக்கிரம் 1946—வது வருடத்திய ஆங்கிலோ—எகிப்திய உடன்படிக்கையைத் திருத்தியமைக்க சமரசப் பேச்சுகள் ஆரம்பமாகுமென்றும் ஆனால் சூடான் விஷயம் தனியாக ஒதுக்கப்படுமென்றும் கருதுகிறார்கள் சூடானுக்கு எகிப்தின் ஆதிக்கமோ பிரிட்டனின் ஆதிக்கமோ இல்லாமல் தனி சுதந்திர நாடாக இருக்கவேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் கருதுகிறார்கள் (ராய்ட்டர்)

எல்லை மாநில மந்திரி ஸ்ரீ கன்னா கைது

பெஷாவர், நவ. 10—

எல்லைப்புற மாகாண மாநில மந்திரியாக இருந்த லாலா மேஹர் சந்த் கன்னாவை, ஆயுதச் சட்டத்தின் கீழ் இன்று போலிசார் கைது செய்தனர்.

மலேயா இந்தியர் பிரஜா உரிமை

நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்துக்கு 10 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும்!

சென்னையில் மலேயாவிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி

சென்னை, நவ. 12

மலேயாவிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதியான திரு ஜே. ஏ. திவியை இன்று பத்திரிகா நிருபர் பேட்டி கண்டபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

ஜப்பான் மலேயாவை ஆக்கிரமிப்பு செய்திருந்த சமயம் நடைபெற்ற பண லேவாதேவி சம்பந்தமாகவும் நிலங்கள் கைமாறியது சம்பந்தமாகவும் மலேயா சர்க்கார் புதிய சட்டமேற்படுத்தப் போகிறார்கள். இச்சட்டம் இந்தியர்களுக்குப் பெரும் பாதகம் விளைவிக்கும். முக்கியமாக அங்கு விரிவாக வர்த்தகம் நடத்தும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களைப் பெரிதும் பாதிக்கும். இவர்களுக்கு அதனால் 10 கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்படும். இச்சட்டம் சர்வதேச சட்டத்திற்கும் நியாயத்திற்கும் ஒழுங்குக்கும் முற்றிலும் விரோதமானது. இந்திய சர்க்கார் தலையிட்டால் மலேயா சர்க்கார் அச்சட்டத்தை நிறைவேற்றாமல் நிறுத்தி வைத்திருக்கின்றனர்.

அதிலுள்ள மிகப் பாதகமான விதிகளைத் திருத்தும்படி இந்திய சர்க்கார் ஆலோசனை கூறுவார்கள்

மலேயாவில் பிரஜா உரிமை பெற விரும்பும் இந்தியர்கள் மலேயாவைத் தங்கள் தாயகமாகக் கொள்ள வேண்டும். இந்தியாவில் பிரஜா உரிமையை பெறும்பலாகாது. தாங்கள் குடியேறிய நாட்டின் நலத்திலே இந்தியர்கள் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும். அந்நியர் வெளியேறவேண்டுமென்றால் சுதந்தர எழாதபடி நடந்து கொள்ளவேண்டும்.

இன்று மாலை திரு திவிக்கு தென்னிந்திய வர்த்தக சங்கத்தார் ஒரு வரவேற்பு உபசாரமளித்தார்கள். அக்கூட்டத்தில் திரு திவி பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்திய வர்த்தகர்களின் தூதுக்கோஷ்டியொன்று மலேயாவுக்கு விஜயம் செய்யவேண்டும். அங்கு குடியேறியுள்ள இந்தியர்கள் வாழ்க்கை நிலையையும் இந்திய வர்த்தக நிலையையும் உயர்த்துவதற்குவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தியாவுக்கும் மலேயாவுக்குமிடையே வர்த்தக உறவை ஏற்படுத்தக் கூடிய சீக்கிரம் மலேயாவில் இந்திய சர்க்கார் ஒரு வர்த்தகக் கமிஷனரை நியமிப்பார்கள்

மா மூடை விழுந்து முதுகெலும்பு முறிந்தது

தொழிலாளியின் பரிதாப மரணம்

கொழும்பு, நவ. 13

கொழும்புத் துறைமுகத் தொழிலாளி ஒருவரான எஸ். பெருமாள் ஒரு கப்பலிலிருந்து இறக்கப்பட்டுக் கொண்டிருந்த மா மூடை முதுகில் விழுந்து முதுகெலும்பில் முறிவு ஏற்படுத்தியதன் காரணமாக மரித்து விட்டார்.

பாராளுமன்ற அங்கத்தினருக்கு ஆராய்ச்சி வகுப்பு

பொது விஷயங்களில் அறிவு பெற வசதி

கொழும்பு, நவ. 13

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்களுக்கு பல விஷயங்களிலும் ஆராய்ச்சி வகுப்புகள் வைத்து விஷயங்கள் தெளிவுபடுத்தப்படுமென அறியவருகின்றது.

பிரதிநிதிகள் சபையில் வரக்கூடிய பல சிக்கலான விஷயங்கள் விவாதத்திற்கு எடுபடுவதற்கு முன்பு அங்கத்தவர்கள் அவ்விஷயங்களில் பல நிபுணர்களின் அபிப்பிராயங்களையும் அறிந்து கொள்ளுவதற்கு இவ்வகையான வகுப்புக்கள் மிகவும் உதவியாக இருக்குமென்று திரு. ஈ. எவ் என். கிரேஷியன் கே. ஸி., பிரதிநிதிகள் மகாநாடொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இப்படி ஆராய்ச்சி வகுப்புகள் லண்டன் பொது மக்கள் சபைஅங்கத்தவர்களுக்கு வைக்கப்படுவதுண்டு. இதை ஒப்பவே இங்கும ஆராய்ச்சி வகுப்புகள் ஏற்படுத்தப்பட விருக்கின்றன. இவ்வகுப்புகளைக் கூடிய சீக்கிரத்தில் நடத்துவதற்கு அங்கத்தவர்களின் ஆதரவை, சிலர் சேகரிக்கத் தொடங்கி வேலை செய்கின்றனர். திரு. கிரேஷியன், அங்கத்தவர்கள் நிபுணர்களின் அபிப்பிராயங்களைப் பெறுவது விவாதங்களுக்கும், நாட்டுக்கும் நற்பயனை அளிக்குமென்று கருதுகின்றார்.

உதாரணமாக, சபையில் கல்வி, அல்லது வைத்திய சம்பந்தமான சீர்திருத்தங்களை விட்டு விவாதம் நடைபெறுவதாயிருந்தால், ஒரு கல்வி நிபுணரை அல்லது வைத்திய நிபுணரை வரவழைத்து அவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்து பின்பு ஒரு முடிவுக்குவர உதவியாக விருக்கும்.

பிரிட்டனில் இவ்வகையான ஆராய்ச்சி வகுப்புகள் நல்ல பயனைக் கொடுத்திருக்கின்றனவாம்.

இப்படி அமைக்கப்படும் ஆராய்ச்சி வகுப்புக்கள் ஒரு கட்சிப் பிரதிநிதிகளுக்கு மாத்திரமாக விருக்க மாட்டாது. எல்லாப் பாராளுமன்ற அங்கத்தவர்களும் கட்சி பேதமின்றிப் பங்கு பற்றிக் கொள்ளலாமாம்

இந்தியா-இலங்கை போலிஸ் மகாநாடு

உள்நாட்டு மந்திரி திறந்தவைத்தார்

கொழும்பு, நவ. 13

இந்தியா-இலங்கை போலிஸ் மகாநாட்டில் கலந்து கொள்ளும் இந்திய தூதுகோஷ்டி இன்று காலை கொழும்பு வந்து சேர்ந்தது. இத்தூதுகோஷ்டிக்கு கான்பகதூர் ஹுஸைன் தலைமை தாங்கிவந்துள்ளார். இவர் மதுரை தென் பகுதியின் டிபுடி இன்ஸபெக்டர்ஜெனரல். இவருடன் சென்னை இரகசிய போலிஸ் டிபுடி சூப்பிரின்டென்ட் திரு நாயர், தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் சூப்பிரின்டென்ட் திரு டி. ஹாசால், ராம்நாட் ஜில்லா சூப்பிரின்டென்ட் திரு எம். டி. எபநேசர், திரு திருஷணமூர்த்தி, திரு பாக்கர் ஆகியவர்களும் வந்துள்ளனர்.

இலங்கையிலே முதன்முதலாக நடக்கும் இம்மகாநாட்டை உள்நாட்டு மந்திரி ஸர் ஒலிவர் குணத்திலகா இன்று திறந்து வைத்தார். இம்மகாநாடு காலை 10 மணிக்கு தினமும் ஆரம்பிக்கும். சனிக்கிழமை வரையும் மகாநாடு நடைபெறும்.

பாதுகாப்பு சபையில் இந்தியா போட்டியிடாது

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அறிக்கை

நியூயார்க், நவ. 12

ஐக்கிய தேச பாதுகாப்பு சபையில் காலியான ஸ்தானத்திற்கு இந்தியாவும் உக்ரைனும் போட்டியிட்டதில் எதுவும் தேர்ந்தெடுக்கப்பட முடியாதிருந்து வருவதால் இந்தியா போட்டியிடுவதிலிருந்தும் பின்வாங்கிக்கொண்டதாக இந்திய பிரதிநிதி கோஷ்டித் தலைவி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அறிவித்தார்.

இம்முடிவை அவர் இன்று நடைபெறும் ஐக்கிய தேச பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவிப்பார். இது விஷயத்தைப்பற்றித்தான் இன்று பொதுச் சபைக் கூட்டத்தில் முடிவு செய்வதென நடவடிக்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தர்மகர்த்தா சபையில் மீதமுள்ள இரண்டு ஸ்தானங்களுக்கு நான்கு நாடுகளிடையே போட்டியிருப்பதால் அது சம்பந்தமாக இன்று மீண்டும் தேர்தல் நடைபெறும். சிறு பொதுச் சபை நிறுவுவது பற்றியும் கொரியா தேர்தல் மேற்பார்வை கமிஷன் நிறுவுவது பற்றியும் இன்று இறுதியாக முடிவு செய்யப்படும். (ராய்ட்டர்)

ரஷிய அணுக்குண்டு

மாஸ்கோவில் மௌனம்

மாஸ்கோ, நவ. 13

சைபீரியாவில் சென்ற ஜூலில் அணுக்குண்டு ஒன்றை வெற்றிகரமாகப் பரீட்சித்ததாக பாரிஸ் பத்திரிகை ஒன்று வெளியிட்டதல்லவா? இது மாஸ்கோவில் மறுக்கப்படவில்லை; ஆயினும் ஊர்ஜிதம் செய்யப்படவும் இல்லை.

(ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதிக்கு ஒரு ஐப்பசி மீ 28உ
வெள்ளிக்கிழமை

நமது 'பிரதிநிதிகள்'

சிலிங்க தேசத்தில் ஒரு அரசன் இருந்தான். அவனிடம் ஒருகைதேர்ந்த சுயம்பாகி சமையல வேலை செய்து வந்தான். அரசனுக்கு வேண்டிய உணவுகளை அந்தந்த வேளைகளில் தயாரித்துக் கொடுத்தான். நாவுக்கினிய பதார்த்தங்கள் காலகெதியில் அரசன் மனதையும் கவர்ந்தது. ஒருநாள் அரசன் சுயம்பாகியைக் கூப்பிட்டு "உனது சமையலை மெச்சினேன்! உனக்கு என்ன வேண்டும்? நான் தரத்தயார்" என்றான். சுயம்பாகி, "அரசரேறே! உலகத்தில் எனக்கு ஒன்றிலும் விருப்பமில்லை; ஆனால் உங்கள் திவ்விய சமுகத்தில் மந்திரியாக இருக்க விரும்புகிறேன்" என்று பதிலளித்தான். அரசன், "இன்று முதல் நீயே மந்திரி" என்றான். அன்று முதல் சுயம்பாகி மந்திரியாகக் கடமையாற்றத் தலைப்பட்டான். இத்தனை காலமும் மந்திரியாகக் கடமையாற்றிய முதன் மந்திரி, வேலை நீக்கஞ் செய்யப்பட்டார். வேறு நாட்டரசன் இதை அறிந்தான். கலிங்க தேசத்தை மீதுபடையெடுப்பதற்கு இதுவே தக்க தருணமெனக் கருதி அதன் படையுமெடுத்தான். கலிங்க தேசம் முற்றுகையிடப்பட்டது. அரசன் சுயப்பிரதாயப்படி சுயம்பாகி மந்திரியைக் கூப்பிட்டான். "பிறநாட்டரசன் படையெடுத்து வந்திருக்கிறான்; நாம் இதற்கு தக்க அணிவகுத்து போர் செய்யவேண்டும்" என்று சொன்னான். அப்பொழுது சுயம்பாகி மந்திரி "மகாராஜாவே! காரியமில்லை. வேற்று நாட்டரசன் நம் நாட்டைக் கைப்பற்றினாலும் நீர் பயங்கொள்ளத் தேவையில்லை விஷயம் மோசமாகினால் நான் சமையல் வேலை செய்து உழைத்து உமக்கு உணவிடுவேன்" என்றானாம்.

இது ஒருபாட்டிகதை. ஆனால் எங்கள் இலங்கை யூ. என். பி. கட்சி மந்திரி சபையினர் பிறநாட்டு மகாநாடுகளுக்கு அனுபும பிரதிநிதிகளை அத்தனை பேரும் இச்சுயம்பாகி மந்திரியாகிய விதமாகவே இருக்கின்றது. முதலாவது தொழில் மந்திரியாக ஆசிய மண்டல தொழிலாளர்மகாநாட்டுக்குஎவ்விதமான தொழிலாளர் ஏதனனக்கூறும் ஏற்றதொருவரை பிரதிநிதியாக அனுப்பினார் தொழிலாளர்கள் கூச்சலிட்டனர். பலன் பூஜ்யம்தான்.

இப்பொழுது கியூபாவில் நடக்கும் சர்வதேச வர்த்தக மகாநாட்டுக்கு திரு. அமரதேவாவை ஒரு பிரதிநிதியாக அனுப்பத் தெரிவு செய்துள்ளனர் திரு. மகாதேவா தமது ஜீவிய காலத்தில் என்ன வர்த்தகஞ் செய்துள்ளார் என்பதை நாமறியோம். அவர் ஒருவர்த்தகமாதிரம் செய்துள்ளார் இலங்கைத் தமிழரசு யூ. என். பி. கட்சித் தலைவர் திரு. சேனநாயக்காவுக்கு விற்க முயற்சி செய்தார். ஆனால் அதிலும் வெற்றி பெறவில்லை. இதற்குக் காரணமாருக்கத்தான் இப்பொழுது அதிகாரமமைதிகொண்ட திரு. சேனநாயக்கா அவரை பிரதிநிதியாக அனுப்ப முனைந்துள்ளார்.

உண்மையில் திரு மகாதேவா வர்த்தக மகாநாட்டுக்குச் செல்லவில்லையாம். அவர் அதை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு வியன்னாவுக்குச் சென்று ஏதோ கண் வைத்தியம்தான் செய்ய விருக்கிறாராம். இலங்கையிலிருந்து புறப்பட்டு வியன்னா வைத்தியரிடம் கண்ணைக்காட்டி விட்டு மகாநாட்டுக்குச் செல்லுவார். அங்கு தமக்குத் தெரிந்த வர்த்தகத்தைப் பேசிவிட்டு வியன்னாவிலே கண் வைத்தியஞ் செய்து கொண்டு திருப்பி வருவார். இத்தனையும் அரசாங்கச் செலவில்தான் நடைபெறும்.

இன்னுமொருவர் யூ. என். பி. கட்சி நிதிக்கு ஏராளமாகப் பணம் வழங்கினார். அவர்

"டிகாலைத் தூக்கிவிடு!"

டிகால் கட்சி மேயருக்குக் காயம்

பிரான்ஸில் தொழிலாளர் கிளர்ச்சி

பாரிஸ், நவ, 13

டிராம்வேக் கட்டணத்தை அதிகரித்ததை எதிர்த்துக் கிளர்ச்சி பண்ணியதற்காக நால்வர் நீது நகர சபை மண்டபத்தி வழக்குத் தொடர்ந்து விசாரிக்கப்பட்டுக்கொண்டிருந்த பொழுது கோபாவேசமான பல்லாயிரம் தொழிலாளர் உள்ளே புகுந்து ஆரவாரம் செய்தனர். இதன் பயனாக ஏற்பட்ட கலகத்தின்போது நகரின் டிகால் கட்சி மேயர் காயத்துக்காளானார்.

நகரின் இரவு கிளப்புகளை இருக்கும் பகுதியில் தொழிலாளர் கோஷ்டிகள் ஆயுதந் தாங்கி "டிகாலைத் தூக்கிவிடு" என்று கோஷித்துக்கொண்டு சென்றனர். இதன் பயனாக ஒருவர் மரித்ததோடு அறுவர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிகிறது.

இங்குள்ள துறைமுகத் தொழிலாளர், கட்டிட, உணவு தொழிலாளர்கள் இப்போ ஒரு வேலை நிறுத்தம் நடத்தி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து ஒரு பிரமாண்டமான பொது வேலை நிறுத்தம் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது. இது சம்பந்தமாக தொழிலாளர் தலைவர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

(ராய்ட்டர்)

ரூ. 4500 சம்பந்தமாக ஏமாற்றியதாக வழக்கு

கொழும்பு, நவ 13

தெஹிவளை கரகம்பிட்டியாவைச் சேர்ந்த டபிள்யு. ஜி. ஹன்ட்றி பெரேரா என்னும் பொக்கிஷ இலாகா குமாஸ்தாதம்மிடத்திலிருந்து எல். விக்கிரமசிங்க, வி. எஸ். பொன்னம்பலம், வி. மாட்டின் டயஸ் ஆகிய மூவரும் ரூ 4500 சம்பந்தமாக ஏமாற்றியதாக கூறிக்கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட்முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதுல ஹென்ட்றி பெரேராவின் சாட்சியத்தின் பின் மாஜிஸ்டிரேட் வழக்கை டிசம்பர் 8-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

தான் திரு. எச். டபிள்யூ அமரசூரியா. காலி தொகுதிக்கு அபேட்சகராக நின்று பெருந்தோல்வியுற்றார். திரு. சேனநாயக்காவுக்கு இது பெருங்கவலை தருணம் வந்ததும் வரை மணிலாவில் நடைபெறும் ஆசியப் பொருளாதார மகாநாட்டுக்குப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்து விட்டார்.

இத்துடன் நன்றி செலுத்துவதை நிறுத்தினாரா திரு சேனநாயக்கா? இலலவே இலலை. ஸ்டெர்லிங் நிதி சம்பந்தமாக லண்டனில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு நிதி மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்தனாவையும், ஸர் ஓ. ஈ. குணதிலகாவையும் அனுப்புவதாகத் தீர்மானித்துள்ளார். திரு ஜயவர்தனா விஷயம் தெரியாவிடாலும், உதவியோக காரணமாக போகவேண்டும்தானாம். ஒலிவர் தெரிந்தெடுக்கப்பட்டதன் காரணமென்னி? இலங்கை நிதி சம்பந்தமாக அவரைவி— வேறு ஒருவருக்கும் ஒன்றும் தெரியாதா? அப்படியில்லை, அவர் பொதுஜன பாதுகாப்பு அதிகாரியாயிருந்த பொழுது ஓட்டர் ஜெனரலாகவுமிருந்து 600 கேளவுகளுக்கும் இன்னும் பதில் கொடுத்ததாகவில்லை எதிர்க் கட்சிக்காரர் பிரதிநிதிகள் சபையிலிதைக் கேட்க விருக்கின்றனர். இதுதான அவர் செல்லுவதன் காரணம் என்பது வெளிப்படையாகிறது. ஸர் ஒலிவரின் உதவியில்லாவிட்டால், திரு சேனநாயக்கா தம் ஏகாதிபத்தியத்தை நாட்ட முடியாது. ஆகவே நன்றி செலுத்தத்தான் வேண்டும். நன்றி செலுத்துவது கலிங்க தேசத்தரசனின் கதையை இலங்கைப் பிரதமர் நீகிரம் பெறவைக்குமென்பது திண்ணம்.

தமிழ்களஞ்சிய நிர்வாகக்கமிட்டி

குற்றவாளிகளை கண்டுபிடிக்க பயிற்றப்பட்ட நாய்கள்

போலிஸ் அதிகாரிகள் ஆலோசனை

கொழும்பு, நவ. 13

குற்றவாளிகளைக்கண்டுபிடிப்பதற்கு நாய்களை பயிற்றி எடுப்பது சம்பந்தமாக அதிகாரிகள் ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது. பல தேசங்களிலும் பயிற்றப்பட்ட நாய்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் படுவதில் உபயோகிக்கப்படுகின்றன. ஆலோசிக்கப்பட்டுவரும் விஷயம் அங்கீகரிக்கப்பட்டால் விரைவிலே குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு பழக்கப்பட்ட நாய்கள் இலங்கையில் பல இடங்களிலும் இருக்கும். நாய்களின் உதவியுடன் எந்தக் களவையும் குற்றவாளியையும் கண்டுபிடிக்கலாமென்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

ரூ. 600 மதிப்புள்ள திருட்டுப் பொருள்கள்

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்

கொழும்பு, நவ. 13

மக்கலம் வீதிவழியாக கடந்த 10-ம் தேதி மாலை சுமார் 5-15 மணிக்கு ஒரு ரிக்ஷாவில் மாப்பெட்டி ஒன்றுடன் வந்த என். எமிஸ் என்னும் பியதாஸா என்பவரை மருதானை போலீஸ் கான்ஸ்டபிள் பி. டி. ஜி. அப்புஹாமி கண்டுசந்தேகத்தின் மீது ரிக்ஷாவை நிறுத்தினார் என்றும் அப்பொழுது பியதாஸா பெட்டியில் அப்பம் இருப்பதாக கூறினாரென்றும் பரிசோதித்தபோது பெட்டியில் சுமார் ரூ 600 மதிப்புள்ள பல பொருளகீள் இருந்தனவென்றும் அதே தினத்தில் அதிகாலையில் மலிபான் வீதியிலுள்ள எச். எம் நாஸ் என்பவருடைய இடத்திலிருந்து திருடப்பட்ட பொருள்கள் என்றும் கூறி இப்பொருள்களை பியதாஸா பிரஸ்தாப எச். எம் நாஸிம் இடத்திலிருந்து திருடியதாக அல்லது திருடுப்போன பொருள்களை வைத்திருந்ததாக குற்றம் சாட்டிக்கொண்டுவரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு பண்டிதகுணவர்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின்போது எதிரி இரண்டாவது குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார். தண்டனை விதிக்கப்படுவது ஒத்திவைக்கப்பட்டது.

72 வயது மணப் பெண்

கல்யாணத்திற்கு இன்னும் சில நாட்தாமதம்

லண்டன், நவ. 12

72 வயதுக் கிழவியான ரொஸலீ தமது திருமணத்தை நிச்சயித்ததபின் 49 வருடங்களாகக் கல்யாணத்தை ஒத்திப் போட்டு வந்தார். இதற்குக் காரணம் அவரது காதலர் கடற்படையுடன் வெளியூர்களுக்குப் போய் இருந்தமையாகும்.

இப்போது அவர் தமது கல்யாணத்தை கிறிஸ்மஸின் போது செய்யத் தீர்மானித்து தமது வீட்டின் ஒரு பகுதியைக் கல்யாணத்திற்கு அனுமதிக்குமாறு கேட்டுள்ளார். இவ்வீட்டில் 3 மாதங்களாக வேறாட்கள் வசித்து வருகின்றனர். நீதிபதி இவ் வனுமதிபெற சற்றுத் தாமதமாகும் என்றும் சற்றுப் பொறுக்க வேண்டும் என்றும் மணப் பெண்ணை வேண்டிக் கொண்டார்.

(ராய்ட்டர்)

இரு மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டன

சுப்பிரீம் கோர்ட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட வைத்தியநாதன் ஐயாக் கண்ணு என்பவரது மரண தண்டனை கண்டி போகம்பரை சிறையில் மே 30தேதி நிறைவேற்றப்பட்டதாக ஒரு அறிக்கை கூறுகிறது. ஜி. ஏ. எச் சிங்கோ எனபவரின் மரண தண்டனை இதே சிறையில் 4உ தேதி நிறைவேற்றப்பட்டது.

இலங்கை சர்வகலாசாலைக்கு பிரதிநிதித்துவம்

தஞ்சை ஜில்லா-யாழ்ப்பாணம் படகுப் போக்குவரத்து

கோடிக்கரைத் துறைமுகம் சீர்திருத்தப் படுகிறது

சென்னை, நவ 11

இம்மாதம் 8-ம் தேதி சென்னை சர்வகலாசாலைக் கட்டிடத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகம் கலைக் களஞ்சிய நிர்வாகக் கமிட்டியின் முதல் கூட்டம் நடைபெற்றது. கல்வி மந்திரி திரு தி. சு. அவினாசிலிங்கம் தலைமை வகித்தார் நிதி மந்திரி திரு ஆர் கே. ஷண்முகம் செட்டியார், ஸ்ரீ மு. அ. முத்தய்யா செட்டியார், டாக்டர் ஸர் ஆர். லக்ஷ்மணசாமி முதலியார், டாக்டர் ராமஅழகப்ப செட்டியார் ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீனிவாசன், ஸ்ரீ ஜ. சிவஷண்முகம் பிள்ளை, ஸ்ரீ எம். பகதவத்சலம், ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி முதலியார் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

கீழ்க் கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேறின:-

1 இலங்கை சர்வகலாசாலைக்கு கலைக் களஞ்சிய நிர்வாகக் கமிட்டியில் ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்றும், அங்ஙனம் தேர்ந்தனுப்பும்படி அச் சர்வகலாசாலைக்குத் தெரிவிக்க வேண்டியதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

2 ஸ்ரீ கிரிகூட சுந்தரம்பிள்ளை கலைக் களஞ்சிய உதவி ஆசிரியராகவும் கலைக் களஞ்சிய காரியாலயத்தின் நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டார். அவருக்கு வேண்டிய குமாஸ்தா முதலியோரை நியமிக்கவும் ஏற்படுத்த வேண்டியதென்று தீர்மானம் செய்யப்பட்டது.

3 கலைக் களஞ்சியம் சம்பந்தமாக அதை எந்த முறையில் எந்த அளவில், எவ்வாறு செய்யவேண்டும் என்னும் விஷயமாக விவரமாகத் திட்டம்போட்டுக் கொடுப்பதற்காக கீழ்க் கண்டவர்களைக்கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டி டிசம்பர் மாதம் 18-ம் தேதிக்குள் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

கமிட்டியின் அங்கத்தினர்கள் பின்வருமாறு:-

டாக்டர் ஸர். ஏ. லக்ஷ்மணசாமி முதலியார்-தலைவர். ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளை, ஸ்ரீமணவாள ராமானுஜம், பிரின்சிபால், சென்னை பிரசிடென்சி காலேஜ் ஸ்ரீ டி. பி. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை, புரொபசர் ஸ்ரீ கே. சுவாமிநாதன், ஸ்ரீ ம. பெரியசாமி இவர்கள் அங்கத்தினர்களாகவும், ஸ்ரீ கிரிகூட சுந்தரம் பிள்ளை காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சர்க்கார் தயார் செய்துள்ள சொற்றொடர்கள்

சென்னை, நவ. 10—

சர்க்காரால் தயார் செய்யப்பட்ட சொற்றொடர்களை 1948-49ம் வருஷம் முதற்கொண்டு பாட புத்தகங்களில் சேர்க்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு செய்திருந்தது. அந்த புத்தகங்களை தான் பாடபுத்தக கமிட்டி சிபார்சு செய்யவேணடும என்றும் சர்க்கார் தெரிவித்திருந்தது. புத்தகங்களை பிரசுரிப்போர் சொற்றொடர்களை அடங்கிய புத்தகங்களை குறிப்பிட்ட காலத்தில் வெளியிடுவதில் அசௌகரியமிருப்பதாயும் அதற்கு இன்னும் ஒரு வருஷ காலம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொண்டனர். 1948-49ம் வருஷத்தின் உபயோகத்திற்காக சொற்றொடர்களை அட்டவணையில் மாத்திரம் கொடுத்தால் போதுமென்றும் 1949-50 வருஷம் முதற்கொண்டு அவசியம் அவைகளை பாட புத்தகங்களில் சேர்க்க வேண்டும் என்றும் சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

தஞ்சை—யாழ்ப்பாணம் படகுப் போக்குவரத்து

சென்னை, நவ 12

தஞ்சை ஜில்லாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையே நிரந்தரமான படகுப் போக்குவரத்து நடத்த சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதற்காக கோடிக்கரை துறைமுகத்தை நவீன முறையில் சீர்திருத்தி யமைக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக சில தகவலகளடங்கிய அறிக்கை யொன்றை தயாரித்து சென்னைசர்க்கார் பொதுவேலைப்பகுதி மந்திரி திரு எம். பகதவத்சலம் இந்திய சர்க்கார் போக்குவரத்து மந்திரிக்கு அனுப்பியிருக்கிறார். தஞ்சை ஜில்லாவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையேபடகுப்போக்குவரத்து மும்முரமாக நடைபெறுவதற்கு சந்தர்ப்பமிக்கிறதென்றும் அதற்காக யந்திரப் படகுகள் வாங்க முடியுமென்றும் தனிப்பட்ட கம்பெனிகள் பணம் போட்டு இப்போக்குவரத்தை நடத்த தயாராக இருக்கின்றனவென்றும் அந்த அறிக்கையில் சென்னை மந்திரி தெரிவித்திருக்கிறார்.

தொழிலாளர் பிரச்னை

புதுடில்லி, நவ. 8—

இலங்கையில் இந்திய சர்க்கார் பிரதிநிதியும், ஆசியா பிராந்திய தொழில் மகாநாட்டில் இந்திய சர்க்காரின் கவனிப்பாளராகவும் வந்த ஸ்ரீ வி. வி. கிரி தொழிலாளர் பிரச்னைகளைப் பற்றி அகில இந்திய ரேடியோவில் பேசுகையில், சுதந்திர இந்தியாவில் தொழிலாளரின் வழ்நிலை நிலை உயரும் வகையில் தொழிற் சட்டங்கள் ஏற்பட வேண்டும் என்று கூறினார் 5 வருஷகாலத்திற்குள் பலனேற்படும் வகையில் தொழில் சட்ட திட்டங்கள் அமையவேண்டும் என்றும், குறைந்தபட்ச கூலி நிர்ணயம், வாரத்தில் 40 மணி நேர வேலை, சமுதாய இன்ஷ்யூரன்ஸ் திட்டத்திற்கு சர்க்கார் நிதி ஆகியவைகள் பற்றியும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்றும் ஸ்ரீ கிரி ரேடியோவில் பேசுகையில் கூறினார்.

பிரிட்டன் வரவு செலவு திட்டம்

புதிய வரிகளால் 2080 லட்சம் பவுண் கிடைக்கும்

லண்டன், நவ. 12

இன்றிரவு பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பொக்கிஷ மந்திரி டால்டன் பிரிட்டிஷ் சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். அவசர சந்தர்ப்பத்தைச் சமாளிக்கவும், விலை உயர்வால் ஏற்படும் நாணய பெருக்கத்தைத் தடுக்கவும் இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் சாராம்சம் பின்வருமாறு:- வருமான வரி உயர்த்தப்படவில்லை நாய் பந்தயத்தின்மீதும் உதைபந்து விளையாட்டுமீது நடைபெறும் பந்தயத்தின்மீதும் வருமானத்தில் 10 சத வீதம் பந்தய வரி விதிக்கப்பட்டிருக்கிறது பீர் மீது ஒரு பைண்டுக்கு ஒரு பென்னி வீதமும், விஸ்கி, ரம், வைன் மற்றுமுள்ள மதுபான வகையரு மீது அதிக வரியும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வரி விதிக்கப்பட்டு இருக்குமதியாகும் வெளிநாட்டுச் சரக்குகள்மீது மேலும் அதிக விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கம்பெனிகளின் லாப வரி இரட்டிக்கப்பட்டிருக்கிறது வருமான வரி, உபரி வரி, அமித லாப வரி இவைகளின் பாக்கிகள்மீது ஜனவரி முதல் தேதி முதல் 3 சத வீத வட்டி விதிக்கப்பட்டிருக்கிறது உணவுப் பொருள்களின் விலையைக்குறைத்து விற்க சர்க்கார் அளித்து வரும் பண உதவியில் மாற்றமெதுவுமில்லை அடுத்த வருடம் முதல் தோல், பருத்தி, கம்பளம் இவைகளின் விலையைக் குறைத்து விற்க சர்க்கார் அளித்து வரும் பண உதவி நிறுத்தப்படும் புகையிலை வரியில் மாறுதல் இல்லை.

இப்புதிய வரிகளால் அரசாங்கத்திற்கு 20 கோடி 80 லட்சம் பவுண் வருமானம் கிடைக்குமென்று பொக்கிஷ மந்திரி கணக்கிட்டிருக்கிறார். ஏற்கனவேயுள்ள சிக்கனத் திட்டத்தின்படி சர்க்காருக்கு 20 கோடி பவுண் வருஷகதிற்கு மிச்சமாகும். சில நிதி நிபுணர்கள் பணத்தை மிச்சப்படுத்த சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளால் நிலைமையைச் சமாளிக்க முடியாதென்று கருதுகிறார்கள். இப்புதிய நடவடிக்கைகளால் இனி தொழிலாளர்கள் அதிக சம்பளம் கோரும்படியான நிலைமை ஏற்படாதென்று தொழிற் சங்கதார் கருதுகிறார்கள். உணவுப் பொருட்களை குறைத்து விற்க சர்க்கார் அளிக்கும் பண உதவி வருடத்திற்கு 39 கோடி 20 லட்சம் பவுணாகும். (ராய்ட்டர்)

இலங்கை சுதந்திர மசோதா

பாராளுமன்றத்தில் வாசிக்கப்பட்டது

அடுத்த வெள்ளிக்கிழமை விவாதிக்கப்படும்

லண்டன், நவ, 13—

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்குட்பட்ட பூரண பொறுப்பாட்சியை இலங்கை பெற்றுக் கொள்ளுவதான இலங்கைச் சுதந்திர மசோதா தேசப் பிரமாணமாக்கப் படுவதற்கு, இன்று பிற்பகல் பொது மக்கள் சபையில் விவாதமின்றி முதலாம் முறையாக வாசிக்கப் பட்டது.

குடியேற்ற நாட்டு மந்திரி திரு. கிறீச் ஜோன்ஸ் மசோதாவை வாசித்தார்

அம்மசோதாவில் அடங்கியுள்ள விரிந்த கொள்கைகள் அடுத்த வாரம் வெள்ளிக்கிழமையன்று இரண்டாம் முறையாக மசோதா வாசிக்கப்படும் பொழுது விவாதிக்கப்படுமென பிரிட்டிஷ் பதில் பிரதம மந்திரி திரு. கோர்டெட் மொறிசன் இன்று அறிவித்துள்ளார்.

—(ராய்ட்டர்)

சீனாவுக்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், நவ. 11

சீனாவுக்கு அமெரிக்க பொருளாதார உதவி 30 கோடி டாலராகும் என அமெரிக்க குடியேற்றநாட்டு மந்திரி மார்ஷல் அமெரிக்க அயல்நாட்டுத் தொடர்புக் கமிட்டிக்கு அறிவித்தார். (ராய்ட்டர்)

யூத பிரிட்டிஷ் கைகலப்பு

நாலு யூத வீரர் மரணம்

அவர்களில் மூவர் பெண்மணிகள்

ஹைபா நவ, 12

மூன்று பிரிட்டிஷ் துப்பறியும் உத்தியோகத்தர்கள் சாதாரண உடையில் போலீஸ் தலைமைக் காரியாலயத்திற்குச் சமீபம்சென்றுகொண்டிருகையில் துப்பாக்கியால் சுடப்பட்டார்கள். இதனால் அவர்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் மிக ஆபத்தான நிலைமையில் தற்போது இருக்கிறார்.

யூதச் செய்தி அறிக்கைப் பிரகாரம் நாலு பேர் வீசார் தாக்கப்பட்டு ஒருவர் இறந்ததாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் யூத கைகலப்பு

பிரிட்டிஷ் போர் வீரருக்கும் யூதப்பயங்கரப் படையினருக்கும் பாலஸ்தீனில் ஒரு கைகலப்பு ஏற்பட்டது.

இதன் பயனாக 4 யூதர்கள் கொல்லப்பட்டார்கள் நால்வர் படுகாயமடைந்ததாகவும், இருவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. இறந்தவர்களில் மூவர் யூதப் பெண்மணிகளாகும்.

ஒரு ஆஞ்சுக் தோட்டத்தில் பயங்கரவாதிகள் துப்பாக்கி முதலிய சாதனங்களை உபயோகிக்க பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும்போதே பிரிட்டிஷ் துருப்புகள் அவர்களைச் சரணாகதி அடையும்படி கட்டளையிட்டது அவர்கள் மறுத்து துப்பாக்கியால் சுட்டனர் அப்போதே கைகலப்பு ஏற்பட்டது.

ஐரோப்பாவுக்கு அமெரிக்க உதவி

எதற்காக என விளக்குகிறார் மார்ஷல்

வாஷிங்டன் நவ 12

அமெரிக்க குடியேற்றநாட்டு மந்திரி ஜியார்ஜ் மார்ஷல சீனாவுக்கு அமெரிக்கா அளிக்கும் 30 கோடி டாலர்களும் சீனாவில் உள்ள அதி தீவிர நாணயப் பெருக்க நெருக்கடியைச் சமாளிக்கவே உபயோகப்படும் என்று தெரிவித்தார்.

ஐரோப்பா நிலைமைபற்றி மார்ஷல் தெரிவித்ததாவது:-

ஐரோப்பாவில் கம்யூனிஸத்தில் இருந்து சற்று விலகிச் செல்லும் ஒரு கூட்டம் இப்போ நடக்கிறது. நாம் இப்போ விரைவில் ஐரோப்பாவுக்கு உதவி செய்யாவிட்டால் அது மிக்க துக்ககரமானது. எங்கள் உதவியால் ஐரோப்பிய நிலைமையின் போக்கை நம்மால் நிர்ணயிக்க முடியும்.

அமெரிக்க வர்த்தக வீழ்ச்சி

வர்த்தகக் காரியதரிசி ஹாரிமன் அமெரிக்க வர்த்தகம் இவ்வருஷ இரண்டாவது குவார்ட்டரில் (3 மாதங்கள்) 1300 கோடி டாலராக இருந்ததாகவும் மூன்றாவது குவார்ட்டரில் 1100 கோடியாகக் குறைந்து விட்டதாகவும் தெரிவித்தார். (ராய்ட்டர்)

ஜமேய்க்கா முறையீடு

இறக்குமதி அனுமதிகளை ரத்தாக்க வேண்டாம்

கிங்ஸ்டன், ஜமேய்க்கா, நவ 12

ஜமேய்க்கா மந்திரி சபையின் பிரதமர் அலெக்ஸான்டர் பஸ்டமெண்டே மாஜி எதிரி நாடுகளை முன்னேற்ற பல கோடி பவுண்செலவாக்கும் பிரிட்டன் மேற்கிந்திய தீவுகள் சம்பந்தமாக சில கோடி ரூபாய்களைச் செலவாக்கப் பிரவாங்குவதாகக் குறிப்பிட்டார்.

பிரதிநிதிகள் சபையில் இறக்குமதி அனுமதிகளை ரத்தாக்கும்படி அரசாங்கம் பிறப்பித்துள்ள உத்தரவை வாபஸ் பெறும்படி கோரி தீர்மானங் கொண்டுவரப்பட்டபோதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜமேய்க்கா சுங்க வரி வருமானத்திலேயே தங்கி இருப்பதாகவும் இறக்குமதி குறையும் பட்சத்தில பொக்கிஷம் வரண்டு விபரீதம் ஏற்படும் என்றும் அவர் அபிப்பிராயப்பட்டார். (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சோல்பரி அரசியல் சட்டம் படும்பாடு

யூ.என்.பி.களின் சுயநலத்திற்காக திருத்தப்படும் அலங்கோலம்

கடைசியாக ஏற்பட்டிருக்கும் ஆபத்து!

"மொரட்டுவை தொகுதி பிரதிநிதியான திரு சோமவீர சந்திரசிரியின் "நீதாஸ" என்னும் சிங்களப் பத்திரிகை (12-11-47)ல் எழுதியிருப்பதின் தமிழாக்கம்.

அரசியல் பரிசீலனைக்காக இந்நாட்டுக்கு வந்த சோல்பரி கமிஷனர்களை அசகாய வீரர் சேனநாயக்கா பகிரங்கமாக பகிஷ்கரிப்பதாக தேசமக்களுக்குக் காட்டினார். பகிரங்கமாக அப்படி செய்து விட்டு, திரைமறைவில் சூழ்ச்சிகரமாக விசாரணைக்கான சகல உதவிகளையும் சோல்பரி கமிஷனர்களுக்கு செய்து கொடுத்தார். முன்பக்கம் ஒரு வேஷமும் பின்பக்கம் வேறுவேஷமும் அணிந்துகொண்டு தனது நோக்கத்தின்படி அரசியல் திட்டத்தை வகுப்பதற்கு தூண்டிக்கொண்டிருந்தார் அப்படித்தான் ஆன பிறகு, அக்திட்டத்தின்படிதான் பிரதம மந்திரியாகக் கூடுமென்றும் நிர்வாக துறையில் தமது குடும்பம் மட்டற்ற ஆதிக்கம் பெறுவதையும் நிச்சயமாகத் தெரிந்துகொண்ட பின், சோல்பரி திட்டத்தை தேசமுழுவதும் ஏற்றுக்கொள்வதற்கான சகல முயற்சிகளையும் செய்தார். அத்திட்டம் மேற்கொண்டும் ஜீவசக்தியடைவதற்காக நடவடிக்கை யெடுத்துக்கொள்வதற்கு இங்கிலாந்திற்கும் சென்றார்.

* * *

அசகாய மூப்பனார் இங்கிலாந்திற்கு சென்று சோல்பரி கூட்டத்தாருக்கு 'கோள்' மூட்டிய பின் வகுக்கப்பட்ட அரசியல திட்டத்தை அமுல் நடத்துவதற் ஹேதுவான சட்டப் பிரமாணங்களை இயற்றுவதற்கு, ஸர். ஒலிவர் குணசிலகாவை அனுப்பிவைக்கப்பட்டது. இங்கிலாந்திலே பந்தயக் குதிரைகளுக்கு பந்தயம் பிடித்துக் கொண்டு 'ஜோராய்' இருந்த சமயத்தில் தயாரித்த அந்த சட்டப் பிரமாணங்களில் சேனநாயக்கா கும்பலுக்கும்-குடும்பத்துக்கும் நன்மை பயக்கக் கூடிய சில சட்டப் பிரிவுகளையும் சேர்த்துக்கொள்ளப் பட்டது, இந்தச் சட்டப் பிரிவுகளை சேர்த்துக் கொண்ட தனால் தமது குடும்ப ஆதிக்கத்தையும் தமது செல்வாக்கையும் நிலைநிறுத்தி, இடதுசாரிகளையும் மற்றவர்களையும் அடக்கி ஒடுக்கி அடிபணியச் செய்யலாம் என்றுதான் நினைத்தார்கள். எனினும் ஸர். ஒலிவரின் மூளைக்குக் கூட தென்படாத சில சட்டப் பிரச்னைகளால் பல தடவை சேனநாயக்கா கும்பல்களின் மூளை குளம்பிப் போனதை உலகம் கண்டு சிரிக்கிறது.

* * *

முதலாவதாக பள்ளிக்கூட மானேஜர்கள்-அரசாங்கத்திடம் கிராண்ட் பணம் எடுப்பவர்கள்பார்லிமெண்ட்தேர்தல்களில் நிற்க முடியாதென்று இருந்த சட்டத்தை, சேனநாயக்கா கும்பல்களின் மட்டற்ற உற்சாகத்தினால் எப்படியோ திருத்தியமைத்துவிட்டார்கள். இப்படி செய்திருக்காவிட்டால் இன்றுள்ள யூ. என். பி களில் அமோகரின் நிலைமை அதோகதிதான்

* * *

இப்படியெல்லாம் தமது கும்பல்களில் உள்ளோர்களின் நன்மைக்காக-யூ என் பி.பார்லிமெண்ட் அபேட்சகர்களின் லாபத்திற்காக-சட்டப் பிரிவுகளை திருத்துவதற்கு வரிந்து கட்டி முன்வந்த சேனநாயக்கா மூப்பனார் அரசியல் கைதிகளாய் இருந்தவர்களுக்கு பார்லிமெண்டில் அங்கம் பெறக் தடையாய் இருந்த சட்டத்தை மாற்ற எள்ளளவும் பிரியப்படவில்லை. அரசாங்க சபை இரண்டு முறை அனுமதித்தும் சேனநாயக்கா மூப்பனார் அலட்சியமாய் இருந்துவிட்டார் 'தன் வினை தன்னைச் சுடும்' என்றாற் போல், சேனநாயக்காகும்பலின் சுயநல நடவடிக்கைகள், அவர்களின் மூளைகளைக் குழப்பிவிட்டிருக்கிறது.

* * *

அரசியல் சட்டப் பிரமாணத்தின் 13-வது பிரிவில் உப விதியின்படி கடந்த 12 மாதங்களில் அரசாங்கத்தில் சம்பளம் பெற்றவர்கள் தேர்தலில் கலந்து கொள்ள முடியாதிருந்தது. அப்படித்தான் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்த பின் பார்லிமெண்டில தமது வாக்குச் சம்மதத்தை உபயோகித்த ஒவ்வொரு தினத்திற்கும் 500 ரூபாய் வீதம் நஷ்ட ஈடு கோரி எந்த ஒரு பொது வாக்காளருக்கும் வழக்குத் தொடர முடியும். சட்டதின்படி அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

* * *

ஸர். ஒலிவரின் "வெட்ட" பிரதேனை மூளைக்கு இந்த சட்டச் சிக்கல் தென்படாததினால் இந்த 13(3-டி) உப விதி சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அரசாங்க சபையைக் கலைத்து புதிய பார்லிமெண்ட் தேர்தல் முடியும் வரையும் பழைய மந்திரிகள் ஏழு பேரும் பதவியில் இருந்தார்கள். இந்தக் காலத்தில் இவள் பெற வேண்டிய சம்பளத்தைப் பெற்றுவிட்டார்கள்.

* * *

கண்டித்தொகுதியில் தேர்தல் மனு சமர்ப்பிக்கப்பட்டபோது ஜோர்ஜ் ஈ. டி சில்வாவுக்கு எதிராக இதன்படி ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டதெனினும் தேர்தல் அதிகாரி அதை நிராகரித்து விட்டார். எனவே ஜோர்ஜ் ஈ டி சில்வா தேர்தலில் நின்று தப்பிக் கொண்டார்.

* * *

பழைய சப்த வேஷதாரிகளில் திரிவேஷதாரிகளுக்குப் பாதகமாக "எடடு" விழுந்தது. பொல்லாத வெள்ளப் பெருக்கினால் சுக்கு நூறாய்ப்போன கெறற பேபாலக ஜோர்ஜ் ஈ டி சில்வாவுக்கு வெற்றியைக் கொடுத்தது. அதிகாரத் தோரணையில் தமது முழு பலத்தையும் உபயோகித்து மிரிகாமத்தில் சேனநாயக்கா மூப்பனார் உயிர் தப்பிக்கொண்டார். தமது முழு சிங்கள பலத்தால் அத்தனை கல்லையை பண்டாரநாயக்கா கைப்பற்றினார் உருட்டு மிரட்டல்களின் பேருதவியினால் தொடங்கல்லந்தைக் காட்டிலிருந்து கொத்தலாவல வெளி வந்தார் பழைய சப்த வேஷதாரிகளில் இப்பொழுது இருக்கும் சதுர் வேஷதாரிகள் தாம் எதிர்பார்த்தபடி மந்திரி பதவிகளில ஆரோகணித்திருக்கிறார்கள்.

* * *

மந்திரி பதவிகளைப் பெற்றும் அரசாங்கத்தை நிறுவினார்களெனினும் பொல்லாத "13(3-டி)" யதுசட்டத்தைப்பற்றி அவர்களுக்கு ஞாபகம் வரவில்லை. ஏன? அவர்களுக்குண்டான மமதையினால்-ஒற்றை கண்ணால்-ஒற்றை காலில்-ஆடினார்கள்; பாடினார்கள். எனினும் கம்பஹா தொகுதி வாக்காளர் ஒருவர் அசகாய மூப்பனாருக்கு எதிராக 1000 ரூபாய் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்த பின்தான் சிறிது பித்தம் தெளிந்தது.

* * *

இப்பொழுதுதான் "13-வது சட்டம்" என்னும் 'பூச்சாண்டி' இருப்பதாக சேனக-புக்குஸஸ-காவிந்த-தேவிந்த-போன்ற சதுர் வேஷதாரிகளுக்கு ஞாபகம் வந்தது. இந்த வழக்கினால் இவர்கள பயந்து விடடார்கள் ஒளித்துக் கொள்ளுவதெங்கே? தமது அத்தியந்த தோழனான பிரியமுள்ள சோல்பரி தேவனிடம் பதறிப் புரண்டு அழுது மண்டியிட்டார்கள்.

வீடமைப்புத் திட்டம் சர்க்காரின் முதல் வேலை

ஸ்தலஸ்தாபன மந்திரியுடன முனிஸிபல் சபை தூதுகோஷ்டி பேட்டி

கொழும்பு நவ. 12—

சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எஸ். டபிள்யு ஆர். டி பண்டாரநாயகாவை கொழும்பு, முனிஸிபல் சபையின் தூதுகோஷ்டி யொன்று சந்தித்தது மந்திரி, இவர்களை நேற்று பிற்பகல் சந்தித்தபோது வீடுகள் அமைப்புதான் அரசாங்கத்தின் முதல் வேலை என்று அவர் தெரிவித்தார். மேலும் இப்பொழுதுள்ள வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தை விரைவில் அமுலுக்கு கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சொந்தக் கிராமங்களில் ஆசிரியர்கள்

பழைய சட்டத்தை புதிய மந்திரி ரத்துச் செய்தார்

கொழும்பு, நவ. 13

ஆசிரியர்களாக இருப்பவர்கள் அவர்களது சொந்த இடங்களில் (கிராமங்கள, நகரங்களில்) உத்தியோகதில் இருக்கப்படாதென கல்வி மாஜி மந்திரி திரு கன்னங்கராவின் சட்டமொன்றை புதிய கல்வி மந்திரி திரு ஈ ஏ நுகலை ரத்துச் செய்து விட்டார். இதுபற்றி எல்லா பாடசாலைகளுக்கும் கல்வி டைரக்டர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். தத்தம் இடங்களிலேயே ஆசிரியர்கள் தங்கள் உத்தியோகங்களை வகித்தால் தங்கள் தங்கள் இடங்களின் நிலைமைக் கேற்ப அவர்களால் நடந்து கொள்ள முடியுமென்று கூறப்படுகிறது.

இந்த போலி சதுர் வேஷதாரிகளின் துரதிஷ்டவசமாகவோ ஊழ்வினையின் பயனாகவோ தோன்றிய இந்த "பூச்சாண்டி" யை ஒழித்துவிட, இவர்கள் சோல்பரி புரோகிதர்மார்க்கமாக அந்நியநாட்டு மந்திரியிடம் தமக்கு நேர்ந்த திகுமுக்கை எடுத்துக்காட்டப் போகிறதப் பிரயத்தனங்களைச் செய்தார்கள் எனினும், அப்படி ஏதாவது தஞ்சம் கிடைக்குமாவென்பதைப்பற்றி அவர்களுக்கு பயம் உண்டாய் இருக்கிறது.

* * *

பார்லிமெண்டு உண்டான பின் அரசியல் சட்டப் பிரமாணத்தில் ஏதாவது திருத்தப செய்யப்பட வேண்டுமானால், அது சம்பந்தமாக பார்லிமெண்டின் சம்மதத்தைப் பெற்றாகவேண்டும். அதுவும் அந்தத தீர்மானத்தின் மீது முழு பார்லிமெண்டு அங்கததவர்களிலும் மூன்றில் இரண்டு பகுதியினர் சம்மதம் கொடுத்தாக வேண்டும். எனினும் இந்தப் பிரச்னையின் மீது அப்படி தமக்கு வாசி உண்டாகுமோவென்று சேனநாயக்கா கும்பலுக்கு சந்தேகமாய் இருக்கிறது

* * *

ஆனால், அங்கும் இங்குமாக இருக்கிற சுயேச்சை மாயாவிகள் சிலருக்கு மந்திரிப் பதவியென்னும் இரையைக் கொடுத்து அரசாங்கத்தை நிறுவப்பட்டதென்றாலும், இந்தப் பிரச்னையின் மீது "பார்லிமெண்டின் மூன்றில் இரண்டு அங்கத்தவர்களின் சம்மதம் சேனநாயக்கா மூப்பனாருக்குக் கிடைக்குமென்பது சந்தேகம்தான் அப்படியன்றி சட்ட மாமூலான தீர்ப்பைக் கொடுப்பதாகு அந்நியநாட்டு மந்திரிக்கும் முடியாது, எனினும் சாம்ராஜ்ய வாதிகளுக்கு பந்தம் பிடிக்கிற-நன்றி பாராட்டுகிற-அழுது மன்றாடுகிற சேனநாயக்கா கும்பல்கள் அதைரியமடையாமல் மென்மேலும் இங்கிலாந்திடம் கெஞ்சி மன்றாடுவார்கள் என்பது நிச்சயம். கிழம் போவதென்னவென்றாலு கவிரதையாய் இருந்து பார்-போம்!

இலங்கைப் பெண்களுக்கு வெளிநாடு கல்வி வசதி

உதவிச் சம்பளங்கள் கொடுக்கப்படும்

கொழும்பு, நவ 12

இலங்கைச் சர்வகலாசாலையிலோ அல்லது வேறு சர்வகலாசாலைகளிலோ பட்டம் பெற்று அதே நேரத்தில் இலங்கை பட்டதாரி பெண்கள் ஐக்கிய சங்கத்தில் அங்கத்தினராக இருப்பவர்கள் சர்வதேச கல்விப் பட்டங்களை 1948-49-ம் வருடத்தில் பெறுவதற்கு அருகதையுள்ளவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இவை சம்பந்தமான முழு விபரங்களும் இலங்கை பட்டதாரி பெண்கள் ஐக்கிய சங்கத்தின் காரியதரிசியிடமிருந்து அறியமுடியுமென்று கூறப்படுகிறது.

சர்வதேச கல்வி ஸ்தாபனம் ஏழு உதவிச் சம்பளங்களை கொடுக்க முன் வந்துள்ளது. இதில் ஐந்து உதவிச் சம்பளங்கள் 1500 டாலர்களும், ஒரு உதவிச் சம்பளம் 500 டாலர்களும் மற்றொரு உதவிச் சம்பளம் 300 பவுணும் மதிப்புள்ளவையாகும் இவற்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் 1948 பெப்ரவரி 16-ம் தேதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும்.

அமெரிக்க பட்டதாரி பெண்கள் சங்கம் 1500 டாலர் மதிப்புள்ளதும் 600 டாலர் மதிப்புள்ளதுமான இரண்டு உபகாரச் சம்பளங்களை அளிக்க முன்வந்துள்ளது. இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 1948 ஜனவரி 1-ம் தேதிக்குமுன் விண்ணப்பிக்க வேண்டும்.

அஷபர்ன் ஹோல் சீனியர் ஆராய்ச்சி கல்வி ஸ்தாபனம் 130 பவுண் மதிப்புள்ள ஒரு உபகாரச் சம்பளம் வழங்கமுன் வந்துள்ளது. இதற்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை. இவ்வருடம் டிசம்பர் 1-ம் தேதிக்கு முன் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கு கேரிக்கைகள்

பாணந்துறை விவசாயிகள் வாலிபர் சங்கங்கள் கூட்ட தீர்மானங்கள்

கொழும்பு, நவ 12

பாணந்துறைடிஸ்டிரிக்ட்விவசாயிகள் சங்கம், இளைஞர் லீக் சம்மேளனம் ஆகியவற்றின் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் பொது பாதுகாப்புச் சட்டம், திருத்தப்பட்ட போலீஸ் சட்டம் மற்றும் தொழிலாளர்கள் உரிமைகளைத் தடுக்கும்சட்டங்கள் முதலியவற்றை ரத்துச் செய்யப்பட வேண்டுமென்றும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு தொழிற்சங்க உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் கொண்ட பிரதிகள் பாராளுமன்ற அங்கத்தினர்கள் எல்லோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அர்பன் சபையினருக்கு சம்பளம் வேண்டுமாம்

தீர்மானம் தோற்றது

பாணந்துறை, நவ. 12

பாணந்துறை அர்பன்சபை அங்கத்தவர்களுக்கு சம்பளம், அலவன்ஸ் முதலியன கொடுக்க வேண்டுமென்று திரு கே. ஏ. ஆர். பெர்னாண்டோ ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். விவாதத்தில் வாக்கெடுக்கப்பட்டபோது இத்தீர்மானத்தை ஆதரித்து அததீர்மானத்தைச்சபையில் கொண்டுவந்தவரே வாக்களித்தார். இக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டன.

மத்திய நிர்மாணக் கமிஷன முதற் கூட்டம்

கொழும்பு, நவ 12

நகர அமைப்புச் சட்டதின் கீழ் அமைக்கப்பட்ட மதிய நிர்மாணக் கமிஷன் முதற் கூட்டம இன்று காலை நடைபெற்றது. ஸதல ஸதாபன டிபுடி கமிஷனர் திரு வி. ஸி. ஜெயசூரியா தலைமை வகித்தார் இலங்கையில் உள்ள காணிகள் அபிவிருத்தி சம்பந்தமான பல விஷயங்களும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன.

போலீஸ் இன்ஸ்பெக்டர் கொலை வழக்கு

ஆறுபேர்களுக்கு சிறை

காலி நவ 11—

தங்காலை டிஸ்திரிக்கில் வல்லாம எலியா என்னுமிடத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் எம். டேவலாய்தன் என்பவரைத் தாக்கிக் கொன்றதாக பதின்மூன்று பேர்கள் மீது குற்றப் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பிரதம நீதிபதி ஸர் ஜான் ஹோலார்ட், முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது இவவழகில் 1946ம் வருடம் நவம்பர் 7ம் தேதி சட்ட விரோதமாக கூட்டம் கூடி பொது நோக்கத்துடன், கொலைபுரியும் நோக்குடன்- இருந்ததாகவும், சட்ட விரோதமான கூட்டத்தின் அங்கத்தினராக இருந்ததாகவும் திரு. வேலாய்தன் என்பவரைக் கொலை செய்ததாகவும், மற்றும் ஒரு குற்றச்சாட்டும் இப் பதின்மூன்று பேர்கள் மீதும் கொண்டுவரப்பட்டிருந்தது.

இவ் வழக்கில் அபயசிங்கா மெண்டிஸ், சார்லிஸ் ரத்தினவீரா என்னும் பாட்டிசிங்கோ பி எதிரிவீரா, மெண்டிஸ் வாணகுல சூரியா, எம் ஜி பிரில் ஜி. வீரவர்னு என்னுப் போன்கா, வணிகசிங்க ஏ ஜேமிஸ், டபிள்யு. பி கரோலிஸ அப்பு, ஏ ஏ. ஹீன் சிங்கோ என்னும் உறிஞ்சா என்னும் ஹிஞ்சாமுத்து, விஜயசூரியா, பட பெண்டாகே சிங்கோரிஸ், வெலிமுனிக பாடியா, தில்லவடலானு ஆராச்சிலேதர்மதாஸா, கே. ஆனிட்ரிஸ் என்னும் எச். ஆண்டோரிஸ் ஆகியவர்கள் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

ஜூரர்கள் ஏகமனதாக ஆறு எதிரிகள் குற்றவாளிகள்என்று அபிப்பிராயப் பட்டனர். வழக்கு விசாரணை நடந்தபோது முதலில் 1, 3, 4, 5ம் எதிரிகள் விடுதலை செய்யப் பட்டிருந்தனர். பின்னர் 2, 6, 13ம் எதிரிகளும் குற்றவாளிகளல்லவென்று ஜூரர்கள் கூறியதால் விடுதலை செய்யப்பட்டனர். மற்ற ஆறு எதிரிகளுக்கும் நீதிபதி தண்டனை விதிக்கையில் ஏழு முதல் 12 வருடங்கள் சிறைத தண்டனை விதித்தார். இவ் வழக்கில் 7, 8, 9, 10, 11, 12ம் எதிரிகளுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பித்தளைக் காப்புகளைக் கொடுத்து ஏமாற்றினர்

எதிரிக்குச் சிறை

கேகாலை, நவ. 11—

கேகாலை கோர்ட்டு முதலியார் திரு. ஈ எஸ். எஸ். இலங்கோன் என்பவரை பித்தளைக காப்புகளைக் கொடுத்து அரை பவுண் காப்புகள் என்று ஏமாற்றியதாக குருநாகலையைச் சேர்ந்த கோமெஸ ஜெயரத்ன என்பவர் மீது குற்றமசாட்டப்பட்டு கொண்டுவரப் பட்ட வழக்கில் கேகாலை மாஜிஸ்ரேட் எதிரிக்கு இருவருடச் சிறைத் தண்டனையும் ரூ, 75 அபராதமும் விதித்தார். அபராதம் செலுததத் தவறின் மேலும் இரண்டு மாதச் சிறையென்றும இரண்டு வருட போலீஸ் மேற்பார்வை யென்றும் அவர் தீர்ப்பளித்தார்.

ஹைதராபாத் சமஸ்தான தொற்று நோய் நிபுணர்

டாக்டர் ராகவேந்திர ராவ் இலங்கை விஜயம்

கொழும்பு, நவ. 12

ஹைதராபாத் சமஸ்தானத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ ராகவேந்திர ராவ் இலங்கைக்கு வந்துள்ளார், இவர் இங்கு சுமார் 3 வார காலத்துக்குத் தங்கியிருப்பார் சர்வதேச சுகாதாரப் பகுதியின் ஆதரவில் (ரொக்பெல்லர் ஸ்தாபனம்) இலங்கையில் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க கையாளப்படும் முறைகள் முதலியன பற்றி அறிவதில் இவர் இங்கு தங்கியிருக்கப்போகும் மூன்று வார காலத்தையும் செலவிடுவார், இவர் ஹைதராபாத் சமஸ்தான பொது சுகாதார இலாகாவின் தொற்று நோய் நிபுணராகும்.

விவேக அறிவுப் போட்டி நிர். 9

ஆசிரியரின் விடையும் பரிசு பெற்றவர் விபரமும்.

1	யா	ம்
2	யா	டு
3	கா	டு
4	அ	ரி
5	பு	ள்
6	ஆ	டை
7	சி	று
8	வ	சு
9	த	ன்
1	வெ	டி

1-ம் பரிசு (ரூ. 1150) சரியான விடையனுப்பிய மேற்கண்ட இருவருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு ரூபா 575-00 வீதம் பரிசளிக்கப் பட்டிருக்கிறது. (1) S. முத்துலிங்கம், 320, காலிரோட், பம்பலப்பிட்டியா. (விசேஷ பரிசும் பெறுகிறார்). (2) K. விக்னேஸ்வர மூர்த்தி, தும்பளை, பருத்தித்துறை.

2-ம் பரிசு (ரூபா 500) ஒரு பிழையுடன் விடையனுப்பிய மேற்கண்ட 26 பேருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு ரூ. 19-24 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. (1) K. சிதம்பரப் பிள்ளை, புலோலி மேற்கு, பருத்தித்துறை. (2-12) S. பாராசிங்கம் S. V. S. O. Dept., இன்னர்காபர் ரோட், திரிகோணமலை (13-14) S. முத்துலிங்கம், 320, காலிரோட் பம்பலப்பிட்டியா (15) மிஸ். T. M. வல்லிபுரம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (16) M. பஞ்சாமி, சங்கத்தானை, சாவகச்சேரி. (17-18) P. தனலக்ஷுமி, விக்னேஸ்வர வித்தியாசாலை, தொல்புரம், களிபுரம். (19-20) V. இராமசாமி, வாணர்குடியிருப்பு, புலோலி மேற்கு, பருத்தித்துறை. (21-23) K. செல்வத்துரை, புலோலிதெற்கு ஐ. ப. சாலை பருத்தித்துறை. (24-26) K. விக்னேஸ்வர மூர்த்தி, தும்பளை, பருத்தித்துறை.

3-ம் பரிசு (ரூபா 300) இரு பிழைகளுடன் விடைகள் அனுப்பிய 119 பேருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு ரூபா 2-53 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

4-ம் பரிசு (ரூபா 200) மூன்று பிழைகளுடன் விடைகள் அனுப்பிய 283 பேருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு சதம் 71 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

3-ம் 4-ம் பரிசு பெற்றவர்களின் பெயர் ஜாபிதா பத்திரிகையில் பிரசுரித்துக்கொள்ளமுடியாமையையிட்டு வருந்துகிறோம். விரும்பினோர் பெயர் விபரங்களை எங்கள் காரியாலயத்திற் பார்வையிடலாம்.

போனஸ் பரிசுகள்:- (1) ரூ. 100 S. பாராசிங்கம் S. V. S. O. Dept., இன்னர் காபர் ரோட், திரிகோணமலை. (800 கூப்பன்கள் அனுப்பியவர்). (2) ரூ. 50 K. சாமித்தம்பி, தும்பளை, பருத்தித்துறை. (604 கூப்பன்கள் அனுப்பியவர்). (3) ரூ. 30 S. பீதாம்பரக் குருக்கள், புலோலி மேற்கு, பருத்தித்துறை (352 கூப்பன்கள் அனுப்பியவர்). (4) ரூ. 20 K. சிதம்பரப்பிள்ளை, புலோலி மேற்கு, பருத்தித்துறை (248 கூப்பன்கள் அனுப்பியவர்).

ஏஜன்ஸி பரிசுகள்:- (1) ரூ. 20 A. ஆரோக்கியசாமி, போட்டி லோலன் அன்ட் போட்டி டிப்ஸ் காரியாலயம், உடஹந்தன்னை S. P. O. (2) ரூ. 15 C. கனகசபை, கனகம் ஸ்டோர்ஸ், தம்பசெட்டி, பருத்தித்துறை. (3) ரூ. 10 ஜெயலங்கா புக் டிப்போ, மார்க்கெற், பருத்தித்துறை.

பரிசுத் தொகைகள் 19-11-47ல் அனுப்பிவைக்கப்படும்.

விவேக அறிவுப் போட்டி நிர். 10

பரிசு ரூபா 2100-00

1-ம் பரிசு ரூபா 1000-00	1-ம் போனஸ் பரிசு ரூபா 100-00
2-ம் பரிசு ரூபா 500-00	2-ம் போனஸ் பரிசு ரூபா 50-00
3-ம் பரிசு ரூபா 250-00	3-ம் போனஸ் பரிசு ரூபா 30-00
விசேஷ பரிசு ரூபா 150-00	4-ம் போனஸ் பரிசு ரூபா 20-00

முடிவு தேதி 4-12-47

பிரவேசக் கட்டணம் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50. ரூபா 4-00-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் கூப்பன்கள் அனுப்புபவர்கள் தாம் அனுப்பும் கூப்பன்களின் தொகையைப்போல் இன்னுமொரு மடங்கு பிரவேசக்கட்டணமின்றி அனுப்பலாம். எமது காரியாலயத்திற்கு முதல்முதலாக சரியான விடை அனுப்புபவருக்கு ரூபா 150-00 பெறுமதியான ஒரு கைக்கடிகாரம் விசேஷ பரிசாக வழங்கப்படும்.

சரியான விடை யாழ்ப்பாணம் எக்ஸ்சேஞ் வங்கி (The Exchange Bank of India and Africa Ltd.) யில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. சரியான விடைகள் ஒன்றுக்கு மேற்படின் குறித்த பரிசுத் தொகை சமமாகப் பகிர்ந்து வழங்கப்படும். இப் போட்டியில் ஒருவர் எத்தனை பரிசுகளும் பெற உரிமையுண்டு. விடைகளைத் தனிக்காகிதத்தில் எழுதியும் அனுப்பலாம்.

1	கா	து
2		சை
3	தி	
4		டு
5	வி	
6		ரி
7	த	
8	வா	
9		ரி
10	வி	

குறிப்புகள்.

1. "..... அற்ற ஊசியும் வராது கான் கடை வழிக்கே"
2. இதோடு பாடப்படும் பாடடு கேட்பதற்கு மிக இனிமையாக இருக்கும்.
3. மழையும் மேகமும் ரொம்ப அதிகமாக இருந்தால் விமானிக்கு இது தப்பி விடும்.
4. "கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற் கடும் புலி வாழும்,...,..,..ன்றே"
5. .....ப்பயன் படியே யாவும் நடக்குமென்பர் பலர்.
6. இது இல்லாமல் விளக்கு எரியுமா?
7. எண்சாண் உடம்பிற்கு இதுவே பிரதானம்
8. குளம்
9. சில பட்கெள்,.....யின் கரையோரங்களில் உணவுக்காகப் பறந்து திரிவதைக் காணலாம்
10. சில கடைக்காரரிடம் ஒரு சாமானை எடுத்து என்ன விலையென்று கேட்டால் சட்டென்று .....சொல்லமாட்டார்கள்

சரியான விடையும் பரிசு பெற்றவர் விபரமும் 12-12-47 சுதந்திரனில் வெளிவரும்.

இலவசக் கூப்பன்களுக்கும் நிபந்தனைகளுக்கும் — எழுதுக. —

Sri Lanka Manufacturing Co, Ltd.,
Courts Road, POINT-PEDRO.

போட்டி டிப்ஸ்

விவேக அறிவுப் போட்டி நிர். 10ன் விடை விமர்சனம் வெளிவந்து விட்டது.

தனிப் பிரதி 25 சதம்

50 சதம் போஸ்டல் ஓடர் அனுப்பி இரண்டு தடவைக்குரிய விமர்சனம் பெற்றுக்கொள்ளுங்கள்.

போட்டி லோலன் காரியாலயம்,
உடஹந்தன்னை S. P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளி தினத்தில் மூன்று கொலைகள்

யாழ்ப்பாணம்

தீபாவளி தினத்தில் ... 13 ... யாழ்ப்பாணத்தில் ... சாராயத் தவறணை ... கள்ளுக் தவறணைகளிலிருந்தும் கள்ளுக் தவறணைகளிலிருந்தும் ஏராளமான கள்ளும் சாராயமும் செலவழிந்துள்ளது. கள்ளு ஒரு போத்தல் ரூ. 1-00 ஆக கூட விலை விற்பட்டது. இதனைக்கில் மூன்றிடங்களில் இருந்து கொலைச் சம்பவங்கள் போலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஒன்றும் நகரில் இருந்து 10 மைல் தூரத்திலுள்ள சுளிபுரத்தில் ஒன்றும் தென் மாநாட்சி பகுதியில் உள்ள மறவன்புலோ என்னுமிடத்தில் ஒன்றும் நடந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் ...

யாழ்ப்பாணத்தில் வெலிங்டன் தியேட்டருக்கு முன் அங்கு வேலை செய்யும் பி சின்னதுரை என்னும் தொழிலாளி குத்திக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக சின்னட்டி ஜோஸப் என்பவரை கான்ஸ்டபிள் சின்னத்தம்பியும் கான்ஸ்டபிள் சர்னேலிஸ் என்பவரும் கைதுசெய்துள்ளனர். மாவிட்டிரேட் கிராஸ். எம். மஹ்ரூப் ஸ்கலக்கு வந்து விசாரணை செய்தார். விசாரணை முடிவில் ஜோஸப் என்பவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

சுளிபுரத்தில் ....

சுளிபுரத்தில் ஆர். செல்லையா என்பவர் சின்னக்தம்பி கதிரவேலு என்பவரால் குத்திக் கொல்லப்பட்டதாகவும் அவரக்கு வின்வநாதர் சுப்பிரமணியம், சபாபதி ரத்தின சாமி ஆகிய இரு உதவி புரிந்ததாகவும் கூறப்படுகிறது எதிரிகள் தலைமறைவாக இருக்கின்றனர் என்று தெரிகிறது.

மறவன்புலோ ....

மூன்றாவது சம்பவம் மறவன்புலத்தில் நடந்துள்ளது. இங்கும் கத்திக்குத்தினாலேயே கொலை நடந்துள்ளதென்று கூறப்படுகிறது. கலநாயகர் குமாரசாமி என்பவர் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். இவரைக் குத்திக் கொலை செய்ததாக கூறப்படும் தம்பிப்பிள்ளை குமாரு, கம்பிப்பிள்ளை குமாரசாமி ஆகிய இருவரும் தலைமறைவாக இருக்கின்றனரென்று தெரிகிறது. சாவகச்சேரி போலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.

போலந்தில் இரகளியப் போலிஸ் ஜரூர்

லண்டாக்ஹோம், நவ. 12

இங்கிலாந்துக்கு ஓட்டம் எடுத்த போலந்து விவசாயக் கட்சித் தலைவர் மைக்கோலஜிக்கின் காரியதரிசி போலந்தில் 'இரகளியப் போலிஸார் அதிக ஜரூராய் வேலை செய்கிறார்கள்' என்று குறிப்பிட்டார். 'அவர்கள் தூக் கிராமங்களில் எல்லாம் இரும்பதாகவும் எல்லாரும் அநேகமாக கமியுனிஸ்ட் கட்சி வந்தவர்கள் என்றும் தெரிவித்தார். சிலர் சம்பளம் பெற்றும் சிலர் சம்பளம் பெறாமலும்கூட இத்தொண்டைச் செய்கின்றனர். 'நாம் எமது உயிரைக்காப்பாற்ற ஓட்டம் பிடித்தோம்' என அவர் கூறினார். (ராய்ட்டர்)

பாராளுமன்ற காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு

வரவேற்பு

அடுத்த ஞாயிற்றுக்கிழமை (16-11-47) மாலை, 2-30 மணியளவில் மலாயா தோட்ட முதலாளியாகிய திரு கே. நாகலிங்கம் அவர்கள்வட்டுக்கோட்டை மூளாய் ரோட்டிலுள்ள சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு ஓர் வரவேற்பு உபசாரம் நடத்துவார்.

ஓடும் ரயிலால் நசுக்குண்டார்

மீகொடைவாசி மரணம்

நீர்கொழும்பு, நவ 13

சென்ற திங்கட்கிழமை மீகொடை வாசியானடபிள்யூ. பெர்னண்டோ ஓடும் ரயிலால் நசுக்கப்பட்டு மாண்டு போனார்.

...கள்ளித்த விதம்!

ஆசிரியர் அவர்களுக்கு

ஐயா,

இம்மாதம் 9-ம் தேதி வெளியான "சுதந்திரன்" பத்திரிகையில் காலஞ்சென்ற திரு. நடேசய்யரின் சேவைகளைப் பாராட்டி எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் என்னைப்பற்றி ஓரிரு குறிப்பு காணப்படுவதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சோல்பரி வெள்ளையறிக்கையின் மீது 1945-ம் ஆண்டு நவம்பர் மீ 9-ம் வ அரசாங்க சபையில் நானும் காலஞ்சென்ற திரு நடேசய்யரும் நிகழ்த்தியுள்ள பிரசங்கங்களே போதுமானது அவற்றில் யாவும் தெளிவாகக் காணக் கிடக்கின்றது.

வெள்ளையறிக்கையில் இந்தியர்களுக்கு எவ்வித நிவாரணமும் இல்லையெனக் கண்டு திரு சேனநாயக்காவைச் சந்தித்துப் பேசினேன். வெள்ளையறிக்கையை அப்படியே ஒப்புக் கொள்ளவும் அதற்கு எனது ஆதரவை அளிக்கவும் கூடாமலிருப்பதை திட்டமாகக் கூறினேன் இது கற்பனையல்ல. இவ்விவரம் எனது பிரசங்கத்தில் காணக் கிடக்கின்றது.

மறுதினம் அரசாங்க சபையில் நான் பேசியபோது என் கொள்கை யாதென்பதை தெள்ளத்தெளிய எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி பின்வருமாறு தீர்க்கமாகப் பேசியுள்ளேன். (1945 Hansard Page 7039) "இலங்கையர்களின் வாக்குரிமைப் பிரச்னை உள் நாட்டு நியாயப் பிரச்னை என்பதாக வெள்ளையறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இப்பிரச்னை எதிர்காலச் சட்டங்களாலும் "கபினெட்" மந்திரி சபையாலும் தீர்மானிக்கப்படும் விஷயமாய் இருக்குமெனில், வேற்றுமையை உண்டுபண்ணும் எவ்வித அரசியலமைப்பையும் நான் ஏற்றுக்கொள்ள முடியாது" எனது பிரசங்கத்தின் இறுதியில் "கௌரவமான ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த சபையின் முதல்வர் தம் சக்தியூராவையும் பிரயோகிக்க தவறமாட்டாரென நம்புகிறேன். இரு பகுதியாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சரியானதும் கண்யம் வாய்ந்ததுமான ஓர் புதிய வழி அரசாங்க நிர்மாண அமைப்புத் திட்டம் வெளியாகுமுன் பிறகதுமென எதிர்பார்க்கிறேன். புதிய அரசியலை ஆரம்பிக்குமுன் இப்பிரச்னைகளைத் தீர்த்து வைக்க மத்தியஸ்தரை மந்திரி சபையார் நியமிக்கலாமென்றும் யோசனை கூறுகறேன். எனது வேண்டுகோளுக்கு சபை முதல்வர் அளிக்கக் கூடிய பதிலைப் பொறுத்ததே நான் இவ்வெள்ளையறிக்கையை ஆதரிக்க முடியும்" என்பதாகக் கூறியுள்ளேன்.

இலங்கை-இந்தியப் பிரச்னையை எதிர்கால சர்க்கார் கவனித்துக் கொள்ளும்படி சோல்பரி கமிஷனர்கள் கூறியுள்ளதைக் கண்டித்துப் பேசியபின் திரு நடேசய்யர் நான் பேசிய முறையைத் தழுவியே கீழ்க்கண்டவாறு அரசாங்க சபையில் பேசியுள்ளார். (1945 Hansard Page 7082) "சபையின் அவதானத்துக்கு கொண்டு வந்துள்ளதும் புதிய சீர்திருத்தத்துக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ எவ்விதமான வாக்களிப்பதெனத் தெரியவில்லை. டொனமூர் அரசியல் சீர்திருத்தத்துக்குப்பின் ஏற்பட்ட அதே சிக்கலான நிலைமை புதிய சீர்திருத்தத்திலும் ஏற்பட நான் விரும்பவில்லை. வாக்குரிமை விஷயமாய் ஓர் சுமுகமான முடிவை ஏற்படுத்த எவ்வளவோ முயற்சிக்கும் முடியவில்லை. நான் கூறிய ஆலோசனைகளைத் தழுவி இச்சபையின் முதல்வர் கூறப்போகும் பதிலைப் பொறுத்தே இவ்வறிக்கைக்கு எனது வாக்கை அளிக்க ஏற்படும்" என்பதாகக் கூறி தம் பிரசங்கத்தை முடித்துள்ளார்.

இவற்றிலிருந்து வெள்ளையறிக்கையின் விவாதத்தின் போது நான் இந்தியப் பிரச்னையில் ஸ்திரமான கொள்கையுடன் இருக்கவில்லையென்றாவது திரு. நடேசய்யரின் தூண்டுதலின் மீதே வெள்ளையறிக்கைக்குப் பாதகமாக நான் வாக்களித்தேனென்றாவது கூறுவதற்கு சிறிதும் இடமில்லையென்பதை இப்போதாவது தாங்கள் ஒப்புக்கொள்ளக் கூடுமென நம்புகிறேன்.

இங்ஙனம்,
தங்களின் உண்மையுள்ள,
ஐ எக்ஸ். பெரைரா.

11-11-47

கட்டுக்குளப்பற்றில் திரிகோணமலைப் பிரதிநிதிக்கு அமோகவரவேற்பு

திரிகோணமலை, நவ 11

சென்ற 8-11-47 ல் நிலாவெளி-கும்புறுபிட்டி-குச்சவெளி தரியாய்-புல்மோட்டை முதலிய கிராமங்களில்- திரிகோணமலை பிரதிநிதி திருவாளர் எஸ். சிவபாலன் அவர்கட்கும் அவரது தோழர்களுக்கும் முஸ்லிம் தமிழ் மக்களால் வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

ஒவ்வொரு கிராமங்களிலும் மாலைக் கச்சேரி வாணவிளையாட்டு சிலம்படி நடத்தப்பெற்றன.

பல முக்கியஸ்தர்கள் சொற்பொழிவாற்றினர். அவர்கள் பேசும் பொழுது தத்தம் கிராமங்களின் கீழான விவசாய நிலை தொழில் நிலை போக்குவரத்து வசதிகளை குறிப்பிட்டு இவற்றை நன்நிலைப் படுத்திக் கொள்ள வேண்டிய உதவிகளை செய்து தரும்படி கேட்டுக்கொண்டனர்.

வரவேற்பாளர்களின் உபகாரங்கட்கும் வேண்டுகோள் கட்கும் விடை இறுக்கும்பொழுது பிரதிநிதி அவர்கள் மக்கள் சகலரும் இவ்வரவேற்பில் பங்குபற்றியுள்ளதுபோல ஜாதி-சமயமாகுபாடின்றி எக்காலத்திலும் ஐக்கிய இயக்கத்தில் நேர்மையாக ஈடுபட்டு வாழல் வேண்டும் என்றும் வேளாண்மையை பொறுத்தமட்டில் ஆறு மாதபோகமே அதிகமாக இக்கிராமங்களில் நடப்பதால் எஞ்சிய ஆறு மாதமும் சோம்பித்திரியாது சிறுதானியங்களை பயிரிட்டோ குடிசைத் தொழிலைச் செய்தோ முயற்சியுடையோராய் இருத்தல் வேண்டும் என்றும் போக்கு வரத்து வசதிகள் பற்றி என்னால் ஆவன செய்து தர என்றும் ஆயத்தமாகவே இருக்கிறேன் என்றும் கூறினார். [ந-நி]

புன்னாலைக்கட்டுவன் இந்து வாலிபர் சங்கம்

வருடாந்த விழா

இந்து வாலிபர் சங்கத்தின் முதலாவது வருடாந்த விழா 1-11-47 வ. சனிக்கிழமை, ஸ்டிசங்கத்தின் ஆதரவில் நடக்குமணேச நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிறக்டர் நா. தாபையா அவர்கள் தலைமை வகித்தார், அத்தருணம் 'வாலிகசாலைகளும் அதனால் பொது ஜனங்களடையும் நன்மைகளும்" என்னும் விஷயம் திரு பி பொன்னம்பலம் ஆசிரியர் அவர்களாலும், "கிராமமுன்னேற்றம்" என்னும் விஷயம் பிரம்மஸ்ரீ க செ. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களாலும் பேசப்பட்டன. பின் அடுத்த வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு நடைபெற்றது

கல்லால் குத்திக் கடுங் காயம் விளைத்தார்கள்

சாவகச்சேரி, நவ. 10

சரசாலையைச் சேர்ந்த சிவனந்தம்பி சரவணை என்பவனை வேலன் கணபதியும் கணபதி முத்தானும் சேர்ந்து கல்லாலடித்தியும் அடித்தும் படுகாயப்படுத்தியுள்ளார்கள் என கூறப்படுகிறது. காயமடைந்தவர் அபாய நிலையில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எதிரிகள் தலைமறைவில் திரிகின்றார்கள் (ந-நி)

லண்டனில் தீவிர வேலை நிறுத்தம்

லண்டன், நவ. 12

லண்டன் மேற்கிலும் தெற்கிலும் உள்ள பஸ் சிப்பந்திகள் மாரிகால பஸ் போக்குவரவுத் திட்டத்தை எதிர்த்து தவிர வேலை நிறுத்தம் ஒன்று செய்தார்கள். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான லண்டன் மக்கள் போக்கு வரத்து வழியின்றித் தவித்தனர். (ராய்ட்டர்)

வங்கி நோட்டில் கள்ளக் கையெழுத்திட்டு ஏமாற்றினர்

எதிரிக்கு 6 மாத சிறை

கண்டி, நவ 13

அம்பிட்டியைச் சேர்ந்த கொலின் அமரசிரி என்பவர் ரூ. 610 சம்பந்தமாக கள்ளக்கையெழுத்துடன் வங்கி நோட்டுக் கொடுத்து ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு கண்டி மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

திரிகோணமலை வீதியில் உள்ள ஜவுளிக் கடையொன்றில் ரூ. 610-க்கு ஜவுளிவகைகளை வாங்கிக்கொண்டு அதற்கு வங்கி நோட்டைக் கொடுத்து அதில் பிரெட்டி அல்வின் என கையொப்பமிட்டதாகவும் தாபனாரான கிராண்ட ஹோட்டல் காஷியர் என்று கூறியதாகவும் சந்தேகத்தின் மீது பொலிஸாருக்கு தகவல் கொடுத்து எதிரியைக் கைது செய்ததாகவும் கூறப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி எதிரிக்கு 6 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

சயாம் புதிய அரசாங்கம்

இந்தோ சைனா தேசிய வாதிகள் படையெடுப்பு

பாங்காக், நவ 12

தளபதி சங்க்ராம் ஞாயிறுக்கிழமையன்று திடீரென புரட்சி நடத்தி அரசாங்கத்தைக் கைப்பற்றிய பின் நிறுவிய புதிய சயாம் மந்திரி சபை இன்று முதல் பிரதம மந்திரி அபேய்வாங்சே தலைமையில் நிர்வாகத்தை ஏற்று நடத்த ஆரம்பிக்கிறது. இது சம்பந்தமாக இன்று ஒரு அறிக்கை வெளியிடப்படும் நாட்டில் பொருளாதார நிலையை உறுதிப்படுத்துவதும் ஜனங்கள் வாழ்க்கைச் செலவு குறைவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதும் அரசாங்க நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் செய்வதுமே புதிய அரசாங்கத்தின் நோக்கமாகும்.

சயாமிலும் பிரெஞ்சு பாதுகாப்பு பிரதேசங்களான கம்போடியாவிலும் வடக்கு அன்னாமிலும் வியட்மினின் (இந்தோ-சைனா தேசீயவாதிகள்) துருப்புகளின் படையெடுப்பு நடைபெறுமென்று பிரெஞ்சு இந்தோ சைனா தலைநகரான சைகோன் நகர வட்டாரங்களில் வதந்தி நிலவுகிறது.

சயாமில் மாகாணங்களில் எதிர்ப்புப் படைகள் போர் ஆரம்பித்திருப்பதாகத் தகவல் கிடைத்ததும் சயாம் துருப்புகள் அனைத்தும் உத்தரவு கிடைத்த 24 மணி நேரத்திற்குள் யுத்த தளங்களுக்குப் புறப்பட தயாராக இருக்கவேண்டுமென்று நேற்று ராணுவ தலைமைக்களுக்கு புதிய அரசாங்கம் உத்திரவு அனுப்பியிருந்தது.

மன்னரை அழைக்க பயணம்

பாங்காக், நவ. 13

டிசம்பர் மாதம் சயாம் மன்னருக்கு 21-வது பிறந்த தினமாதலால் அதை சயாமில் கொண்டாடுவதற்காக இப்பொழுதுள்ளசென் சர்வ கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கும் சயாம் மன்னர் அதுலத்தை அழைத்துவர விவசாய மந்திரி காரியாலய அதிகாரியான இளவரசு பெனிரி வெள்ளிக்கிழமையன்று விமானத்தில் சுவிட்ஜர்லந்துக்குப் பயணமாகிறார்.

சீனர் நல உரிமை பாதுகாக்கப்படுமென்று சயாம் ராணுவ தலைவர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். (ராய்ட்டர்)

பதுளை அர்பன் சபை

வர் போட்டியின்றி தெரிவு

பதுளை, நவ. 13

பதுளை அர்பன் சபை தேர்தல் நியமனப் பத்திரங்கள் பதுளைக் கச்சேரியில் தாக்கல் செய்யப்பட்டன. ஒன்பது தொகுதிகளில் ஐந்து தொகுதிகளுக்குப் போட்டியிலை ஐந்து தொகுதிகளிலும் உள்ள திருவாளர்கள் எம். ஐ. பக்கீர் சாய்பு, எஸ். எச். அபயசேகரா, ஏ பி சின்னத்தம்பி, ஆர். டி. டி. ம்காலிங்கம், கே. எம். பி. பி. மூகம்மது ஆகியவர்கள் தெரியப்பட்டனர். மற்ற நான்கு தொகுதிகளுக்கும் போட்டியிருக்கிறது.

கிங்ஸ்லியில்

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

கண்ணுக்கினிய ஜோடிகளின்!
அபூர்வ நடனங்கள், பாடல்கள் நிறைந்தது
விடுதலைக்குப்பின் கிருஷ்ணன்தோன்றும்
மகத்தான 2வது படம்

கன்னிகா

உங்கள் உள்ளங் கவர்ந்த நடிகர்களான
என் எஸ். கிருஷ்ணன், டி. ஏ மதுரம், டி. ஈ. வரதன். எம்.எஸ சரோஜினி,
எம். ஆர் சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது.

சென்ட் சபைக் கூட்டம்

அங்கத்தினர் பதவிகளின் கால அளவு

திரு பெரிசுந்தரம் உப தலைவர்

கொழும்பு, நவ. 13

சென்ட் சபையின் முதலாவது கூட்டத்தில் நேற்று திரு பெரிசுந்தரம் உப தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவருடன் உப தலைவர் பதவிக்கு போட்டியிட்ட திரு ஸி ஏ. கார்டினர் தோல்வியுற்றார் திரு பெரிசுந்தரத்துக்கு 14 வாக்குகளும் திரு கார்டினருக்கு 12 வாக்குகளும் கிடைத்தன

அடுத்தபடியாக சென்ட் சபை அங்கத்தவர்களின் உத்தியோக காலத்தை குறிப்பிடுவதற்கு சென்ட்டர்களை மூன்று பிரிவுகளாக பகுக்கவேண்டிய வேலைகள் நடந்தன. இப்பகுப்புகள் சீட்டுப் போட்டே நடத்தப்பட்டன.

மூன்றாவது வகுப்பு (6 வருடம்)

டாக்டர் எல். ஏ. ராஜபக்ஷா, மர் முகம்மது மாக்கான் மரைக்கார், திரு ஈ. ஏ. பி. விஜயரத்தினா முதலியார் ஏ. ப. ராஜேந்திரன், திரு சிற்றம்பலம் கார்டினர். (நியமிக்கப்பட்ட சென்ட்டர்கள்)

திரு பி. ரதவத்தைதிஸாவ டாக்டர் எம். ஜி பெரேரா, திரு எஸ் நடேசன், திரு ஜே கொத்தலாவல திரு எல். பி. விஜயசேன (தெரிவு செய்யப்பட்ட சென்ட்டர்கள்)

இரண்டாவது வகுப்பு (4 வருடம்)

ஸர் ஜி. விஜயகூன், ஸர் ஒலிவர் குணசேகரா, திரு ஸி குமாரசுவாமி, டாக்டர் வி. ஆர். ஷொக்மன், டாக்டர் பிரான்ஸ குணசேகரா (நியமிக்கப்பட்ட சென்ட்டர்கள்)

திரு டபிள்யூ. ஏ. பி. சொய்ஸா, திரு பெரிசுந்தரம், திரு ஏ. ஆர் ஏ. ராஸிக் ஸ்ரீமதி அடெலன் மொலமுரே, திரு டபிள்யூ கே ஜினதாஸ [தெரியப்பட்ட சென்ட்டர்கள்]

முதலாவது வகுப்பு (2 வருடம்)

ஸர் ஜோன் டார்பட், மிஸ். ஹிகிகூரே, கர்னல் டி. ஒய் ரைட், திரு சாஸ ஏ. எம். டி. ஒல்வா, திரு ஜே ஏ டி. விக்டோரியா (நியமிக்கப்பட்ட சென்ட்டர்கள்)

திரு ஸி. டி. சொய்ஸா, திரு ஸி விஜயசிங்கா, திரு ஆர். எப். எஸ் டி மெல், திரு டி. டபிள்யூ. ஜே பெரேரா, டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் (தெரியப்பட்ட சென்ட்டர்கள்)

கூட்டத்திற்குச் சமுகமளிக்காத சென்ட்டர்களின் சீட்டுக்கள் தலைவரால் எடுக்கப்பட்டன. தெரிவு முடிந்ததும் தலைவர் கவர்னரின் செய்தியொன்றை சபையில் படித்தார். மாலை 4-25 மணிக்கு சபைக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆள் மாறாட்டமாக வாக்களித்தார்

ரூ 100 அபராதம் விதிக்கப்பட்டது

கம்பஹா, நவ. 13

மிரிகம தொகுதி தேர்தல் தினத்தன்று ராட்டல் கொடை என்னுமிடத்தில் ஆள் மாறாட்டமாக வாக்களித்ததாக ஹக்கலை என்னுமிடத்தைச் சேர்ந்த எச். ஏ. குணசேகரா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு கம்பஹா மாஜிஸ்டிரேட் ரூ. 100 அபராதம் விதித்தார்.

விவாகரத்து வழக்கு

யுத்த காலத்தால் ஏற்பட்ட தம்பதிகள் மனக் கஷ்டம்

கொழும்பு, நவ. 13

பர்பலப்பிட்டி டன்னரி பாத என்னுமிடத்தைச்சேர்ந்த திரு பி ஓ விக்கிரமசிங்க, இப்பொழுது பிரிட்டனில் உள்ள தமது மனைவி ஸ்ரீமதி ஈ பெலிஸியா டக்மர் விக்கிரமசிங்க என்பவரிடமிருந்து விவாகரத்து கோரி ஒரு வழக்கை டிஸ்டிரிக்ட் கோர்ட்டில தாக்கல் செய்திருந்தார். இவ் வழக்கு தற்காலிக டிஸ்டிரிக்ட நீதிபதி திரு. வி ஈ ராஜகாரியர் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது

விசாரணையின் போது திரு விக்கிரமசிங்கா வும் ஸ்ரீமதி எனிட்கெம்ஸ்(மூத்தமகள்) என்பவரும் சாட்சியமளித்தனர் திரு. விக்கிரமசிங்கா தமது மனைவியை 1925-ம் வருடம் பெப்ரவரி மாதம் 12-ம் தேதி விவாகம் செய்திருந்தார். இவர்களுக்கு ஆறு குழந்தைகள் இருக்கின்றார்கள் 1939-ம் வருடம் வரையும் இக் குடும்பத்தினர் சந்தோஷமாயிருந்தனர் என்றும் யுத்தம் ஆரம்பித்த பின்னர் குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டதாகவும் ஆறுவது குழந்தை 1941-ம் வருடத்தில் பிறந்த பின்னர் அடிக்கடி குடும்பத்தில் பிரிவுகள் ஏற்பட்டதாகவும் இராணுவத்தினருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாகவும் குடும்பத்தைக் கவனியாது வெளியிடங்களுக்குச் செல்வதும் இராணுவத்தினருடன் களியாட்டங்களில் கலந்து கொள்வதுமாக இருந்து இப்பொழுது லண்டனில இருப்பதாகவும் விசாரணையின்போது தெரியவந்தது வழக்காளி கோரியபடி நீதிபதி விவாகரத்துச்செய்துகொள்ள அனுமதியளித்தார்.

கைதியைக் கண்டுபிடிக்க போலிசாரின் வேட்டை

கம்பஹா, நவ. 13

கம்பஹா மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு திங்கட்கிழமை காலை சுமார் 10 மணிக்கு கிரின்டிவிலா பகுதியில மெட்டக மாவைச் சேர்ந்த ஒருவர் வந்து பட்டவெலா நேவிஸ சப் இன்ஸ்பெக்டர் எல். ஜிராஸிங்கியிடம் வெளிக்கடை சிறையிலிருந்து செப்டம்பர் 12-ம் தேதி தப்பி வெளியேறிய டொன் ஜேம்ஸ் விஜயரத்னா ஜெய சுந்தரா என்னும் கைதியை கம்பஹா ரயில்வே ஸடேஷனுக்கு சமீபகதில் தாம் பார்த்ததாக தெரிவித்தார் உடனே போலிசார் ஸ்தலத்துக்கு அந்நபருடன் விரைந்து சென்றனர். ஆனால் ஆளைக் காணவில்லை. போலிசார் கம்பஹா பகுதி முழுவதும் சோதனை செய்தும் ஒருவிதமான பிரயோஜனமும் இல்லாது போய் விட்டது.

பாடசாலை கட்டிடத்தில் தீ

களுத்துறை, நவ 13

பந்தியா சர்க்கார் பெண் பாடசாலை சனிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் தீயிடப்பட்டதாகக கூறப்படுகிறது. கிராமவாசிகள் ஸ்தலத்துக்கு வந்து தீயை அணைக்குமுன் ஓலையினால் வேயப்பட்ட பகுதி தீக்கரையாகி விட்டதென்று கூறப்படுகிறது.

கவர்னர் கண்டி சென்றார்

கொழும்பு, நவ. 13

மே. த கவர்னர் ஸ்ரீமதி மூர் சீமாட்டியுடன் கண்டிக்கு நேற்று இங்கிருந்து புறப்பட்டார்.

சிர நேத்திராஞ்சனத் தைலமே

சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மை புத்தயிர் கொடுத்து காப்பாற்றியது

சப்ததீவு வாலிப சங்க கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு செல்லுகிறார்:

"சென்ற சில காலங்களாக சிர ரோக உபாதையினால் கண்ணிலும் கடும் வலித்தம் ஏற்பட்டு பல வித வைத்தியங்கள் செய்தும் சுகம் காணாது கடைசித் தடவையாக திரு. எம். கே ஜெகநாதன் கண் வைத்தியரினால் வெளிவரப் பெற்ற சிர நேத்திராஞ்சனத் தைலத்தை இரு கிழமை பாவித்தமட்டில் எமது சகல உபாதைகளும் நீங்கியதுடன் எனது கண்ணுக்கும் பூரண சுகத்தைப் பெற்றேன் இத் தைலத்தின் அபூர்வ குணத்திற்கும் சிறமைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இதன் நற்குணத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்". ஒப்பம்

திரு வி. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசி,
புங்குடுதீவு.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர்வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளிர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25
4 ,, ,, ரூ. 5-50

தயாரிப்பாளர்:-
எம். கே. ஜெகநாதன்,
யூனி கண் வைத்தியர்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

தென் பகுதியில் அதிக மீன்கள்

மீன் ருத்தல் 10 சதம்

களுத்துறை, நவ. 13

களுத்துறை டிஸ்டிரிக்ட் பகுதியிலஉள்ள கடற்கரை யோரங்களில் ஏராளமான மீன்கள் அகப்பட்டு வருவதால் இப்பகுதியில் மீன்கள் ருத்தல் 10 சதத்துக்கு கிடைக்கின்றன என்று கூறப்படுகிறது.

இலங்கையின் தென் பகுதியில் அதிக மீன்கள் அகப்படக் கூடிய பருவ காலமாக இருப்பதாக கூறப்படுகிறது சமீபமாக சில நாட்கள அதிகமாக மீன்கள் கிடைப்பதாகவும் விலை அதிகம் குறைந்து விட்டதாகவும் தெரிகிறது.

காலஞ்சென்ற நீதிபதிக்கு கோர்டில் அநுதாபம்

கொழும்பு, நவ 13

கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்ட நீதிபதி திரு வி. எச். விஜயரத்தினாவின் மரணத்தைக் குறித்து கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்று அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்டிற்காக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 14உ இந்த பத்திரிகை 144A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org